திருவள்ளுவராண்டு 2055 01.01.2025

உலகத்தமிழ்

இதழ் ௨௬௫ (265)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்

புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை எனத் தொடங்கும் கபிலரின்
ஐங்குறுநூற்றுப்பாடல் எண் இருநூற்(று) அறுபத்(து) ஐந்து
ஒலிகொள் தமிழ்ச் சொற்களைப் புவிமிசை போற்றும் வண்ணம்திரட்டி வெளியிடும்
உலகத்தமிழிதழ் இரு நூற்(று)அறுபத்(து) ஐந்து

32

அமெரிக்கா

குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும்

"யாதெனின். . . யாதெனின். . . "

திருக்குறளில் 11 குறள்கள் "யாதெனின்" என்று கேள்வி எழுப்பி, குறிப்பிட்ட ஒரு கருத்தை "எது என்றால்" என்று விளக்கும் வகையில் அமைகின்றன. இக்கட்டுரையின் குறள்களுக்கு மு. வரதராசனார் எழுதிய விளக்கவுரை எடுத்தாளப்பட்டுள்ளது.

கொல்லாமை என்பதை வலியுறுத்த விரும்பும் வள்ளுவர் அருளல்லாது எது என்றால், அறச்செயல் எது என்றால், நல்லொழுக்கம் எது என்றால் என்று பல்வேறு வகைகளில் கேள்வி எழுப்பி, கொல்லாமை என்பதுதான் நாம் பின்பற்ற வேண்டிய நல்லறம் என்று விளக்குகிறார். அருளல்லாது எது என்றால்;

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் – [குறள். 254]

அருள் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமலிருத்தல்; அருளல்லாது எது என்றால் உயிர்களைக் கொள்ளுதல் அதன் உடம்பைத் தின்னுதல் அறம் அல்லாதது.

அறச்செயல் எது என்றால்;

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும் – [குறள். 321]

அறமாகிய செயல் எது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையாகும், கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.

- தேமொழி
அமெரிக்கா

குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும்

33

நல்லொழுக்கம் எது என்றால்

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. [324]

நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

இதே முறையில், மற்ற நல்லொழுக்கங்களான கள்ளாமை, தீங்கு செய்யாமை ஆகியவற்றையும் எது என்ற கேள்வி எழுப்பிப் பதில் கூறும் முறையில் விளக்குகிறார்.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். [178]

ஒருவனுடைய செல்வத்திற்குக் குறைவு நேராதிருக்க வழி எது என்றால், அவன் பிறனுடையகைப் பொருளை விரும்பாதிருத்தலாகும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். [291]

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

உயிரைக் கொல்லுதல், ஒருவர் பொருளைக் களவாடுதல், தீங்கு செய்தல் இவற்றைத் தவிர்க்கும் நோக்கில் எது என்றால் என்று கேள்வி எழுப்பி விளக்கும் வகையில் இக்குறள்கள் அமைந்திருக்கின்றன.

சிறந்த நட்பு எது என்றால்; நட்பிற்கு இலக்கணமாக அமைவது; மாறுபாடு இல்லாத நெஞ்சத்துடன் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து அரவணைத்துச் செல்லும் நிலையும்; நெடுநாள் நட்பின் காரணமாக ஒருவர் உரிமையுடன் நமக்கு ஏற்புடையது அல்லாத ஒரு செயலைச் செய்துவிட்டாலும் நட்பு கருதி அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவதுமாகும்.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. [789]

நட்புக்கு சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. [801]

பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினாவினால் அது பழகியவர் உரிமைப் பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

34

அமெரிக்கா

குறள் தரும் சொற்சுவையும் பொருட்சுவையும்

அறியாமை எது என்றால்;

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். [831]

பேதைமை என்று சொல்லப்படுவது யாது என்றால், தனக்கு கெடுதியானதைக் கைக் கொண்டு ஊதியமானதைக் கைவிடுதலாகும்.

வெண்மை எனப்படுவதி யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. [844]

புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது என்றால் யாம் அறிவுடையேம் என்று ஒருவன் தன்னைத்தான் மதித்துக் கொள்ளும் செருக்காகும்.

சான்றோர்கள் பண்பு எது என்றால்;

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். [986]

சால்புக்கு உரைகல் போல் மதிப்பிடும் கருவி எது என்றால் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரிடத்திலும் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்.

வறுமையின் கொடுமை எது என்றால்;

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. [1041]

வறுமையைப்போல் துன்பமானது எது என்று கேட்டால், வறுமையைப் போல் துன்பமானது வறுமை ஒன்றே ஆகும்.

"அரியது கேட்கின் வரிவடிவேலோய்" என்று ஔவையார் பாடல் ஒன்று கேள்விக்கு விளக்கம் அளிக்கும் வகையில் அமைந்திருப்பதும், தொன்றுதொட்டு அக்காலம் முதல் இக்காலத் திரையிசைப் பாடல்கள் வரை கேள்வி கேட்டுப் பதில் சொல்லும் வகையிலே அமைந்திருப்பதும் தமிழ் மொழியில் யாவரும் விரும்பும் தனிச்சிறப்புக் கொண்ட ஓர் இலக்கியக் கூறு எனலாம்.

****

யாமறிந்தவரையில்...

35

- தேமொழி
அமெரிக்கா

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்

என்று தமிழின் சிறப்பின் மீது பெருமிதம் கொண்டு பாடும் பாரதியார், அடுத்த பாடலில்;

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை,
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

தமிழ்ப் புலவர்கள் பற்றியும் பெருமிதம் கொள்கிறார்.

இவ்வாறு பாரதி போலவே வள்ளுவரும் 'நான் அறிந்தவரையில்', 'எனக்குத் தெரிந்தவற்றில்', என்று 'தான் அறிந்தவரையில்' தன் கருத்துகளாகக் கூறும் குறள்களும் சில உள்ளன. குறள் கூறும் 1330 கருத்துகளும் வள்ளுவரின் கருத்துகளே என்றாலும், வள்ளுவர் இதுபோல தன் கருத்து என்ற கோணத்தில் என்ன கருத்துகளைக் கூறுகிறார் என்று அறியும் ஆவலும் தோன்றுகிறது. இது போன்ற ஆய்வுகளுக்கு முனைவர் ப.பாண்டியராஜா அவர்களின் தமிழ் இலக்கியத் தொடரடைவு (Concordance for Tamil Literature - http://tamilconcordance.in/index.html) தளம் மிக உதவியாக இருக்கும். திருக்குறளில் 'யாம்' என்ற சொல் 13 குறள்களில் 14 முறை (1140ஆம் குறளில் இருமுறை) வருகிறது. 'யாமும்' என்ற சொல் காதலியின் கூற்றாக உள்ள காமத்துப்பாலின் இரு குறள்களில் வருகிறது.

வள்ளுவர் அறிந்த வரையில்:

குறிப்பு: அடைப்புக்குறிக்குள் குறள் எண்ணும், குறளுக்கு மு.வரதராசனார் வழங்கிய விளக்க உரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற. (61)

பெறத்தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்றப்பேறுகளை யாம் மதிப்பதில்லை.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்

வாய்மையின் நல்ல பிற. (300)

யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள் வாய்மைவிடத் எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத்தக்கவை வேறு இல்லை.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன

ஒப்பாரி யாங்கண்ட தில். (1071)

மக்களே போல் இருப்பார் கயவர், அவர் மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமை வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் யாம் கண்டதில்லை.

நான் அறிந்தவற்றில் அறிவுள்ள நன்மக்களைப் பெறுவதே சிறந்த பேறு; நான் அறிந்தவற்றில் வாய்மையே பண்புகளில் சிறந்த பண்பு; நான் அறிந்தவற்றில் கயவர்களும் மக்களைப் போலவே இருக்கும் ஒப்புமை வியக்கத்தக்கது என்கிறார் வள்ளுவர்.

****

வள்ளுவர் என்னும் காதலர்

- தேமொழி
அமெரிக்கா

கூகுள் இணையத் தேடலின் முடிவாகக் கிடைக்கும் எண்ணிக்கையின் அடிப்படையில் *(Google search results: About 'N' results, in 'T' seconds)* மக்களிடையே மிகவும் புகழ் பெற்ற, பெரும்பாலோர் அறிந்த குறளாகத் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பது 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்ற வள்ளுவத்தின் முதல் குறள். அதற்கு அடுத்த இடத்தில் இருப்பது, இல்வாழ்க்கையின் சிறப்பை வலியுறுத்தும் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்ற குறள். வாழ்க்கை நெறிகளை வகுத்தளிக்க முடிவெடுத்த வள்ளுவர் அறம், பொருள் ஆகியவற்றுடன் இல்லறத்திற்கு வழிகாட்டும் இன்பம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் முப்பாலின் மூன்றாம் பாலான காமத்துப் பாலில் 250 குறட்பாக்களை அருளியுள்ளார்.

இவற்றுள் 'யாம்' என்று திருவள்ளுவர் தன்னையே ஒரு காதலராகக் குறிப்பிட்டு எழுதிய பாடல்களும் உள்ளன. அவ்வாறு, 'யாம்' என்று வள்ளுவர் குறிப்பிடுவதைக் கீழ்க்காணும் குறள்கள் மூலம் அறிய முடிகிறது.

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம் வீழ்பவள். (1111)

அனிச்சப்பூவே நல்ல மென்மை தன்மை பெற்றிருக்கின்றாய், நீ வாழ்க, யாம் விரும்பும் காதலி உன்னை விட மெல்லியத் தன்மை கொண்டவள்.

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். (1123)

என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே நீ போய் விடு, யாம் விரும்புகின்ற இவளுக்கு என் கண்ணில் இருக்க இடம் இல்லையே.

ஊடுக மன்னோ ஒளியிழையா மிரப்ப
நீடுகமன்னோ இரா. (1329)

காதலி இன்னும் ஊடுவாளாக, அந்த ஊடலைத் தணிக்கும் பொருட்டு யாம் இரந்து நிற்குமாறு இராக்காலம் இன்னும் நீட்டிப்பதாக.

யாம் கண்ணின் காண நகுபஅறிவில்லார்
யாம்பட்ட தாம்படா ஆறு. (1140)

யாம் பட்ட துன்பங்களைத் தாம் படாமையால் அறிவில்லாதவர் யாம் கண்ணால் காணுமாறு எம் எதிரில் எம்மைக் கண்டு நகைக்கின்றனர்.

கண் தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது. (1171)

தீராத இக்காமநோய், கண்கள் காட்ட யாம் கண்டதால் விளைந்தது; அவ்வாறிருக்க, காட்டிய கண்கள், இன்று அன்பு கொண்டு உணராமல் துன்பத்தால் வருந்துவது ஏன்?

(குறிப்பு: மேலே இறுதியாகக் கொடுக்கப்பட்ட இரு குறள்களும் [1140, 1171] காதலியின் கூற்றாகப் பெரும்பாலும் பொருள் கூறப்படுகிறது.)

இவை தவிர்த்து; 1150, 1245, 1312 'யாம்' என்று காதலி கூற்றாகவும்; 790, 844 'தான் என்ற எண்ணம்', 'தான் என்னும் செருக்கு' முதலான பொருள்களிலும் ‘யாம்’ என்ற சொல் திருக்குறளில் இடம்பெறுகிறது.

****

- தேமொழி
அமெரிக்கா

36

பள்ளிப் பாடங்களில் திருக்குறள்

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்குறளின் பெருமை பரவலாக அறியப்பட தமிழார்வலர்கள் பெரும் முயற்சி எடுத்தனர் என்பது வரலாறு. பள்ளிக்கல்வியில் திருக்குறள் இடம் பெற வேண்டும் என்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. விடுதலை பெற்ற இந்தியாவின் தமிழ்நாட்டுப் பள்ளி மாணவர்களின் பாடத்திட்டத்தில் திருக்குறள் இடம்பெறத் தொடங்கியது. மனப்பாடப் பகுதியாகப் பல குறள்கள் மாணவர் அறிவுத்திறனையும் வாழ்வியல் விழுமியங்களையும் உயர்த்தியது. இன்று வாழும், தமிழகப் பள்ளியில் பயின்ற எவருக்குமே அவர்கள் படித்தவற்றில் ஒரு 25 குறள்களாவது நினைவில் தங்கி இருக்கும் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

இருப்பினும், இன்றைய சமூகத்தில் இளைஞர்களிடம் ஒழுக்கம் பற்றிய சிந்தனையும் நன்னடத்தையும் குறைந்து வருவதால் ஒழுக்கமுள்ள சமூகத்தை ஏற்படுத்த 6-ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை திருக்குறளைத் தனிப்பாடமாக அறிவிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்ற பொதுநல மனுவை ஏற்றுப் பள்ளிப் பாடத்திட்டத்தில் திருக்குறளைத் தனிப் பாடமாகச் சேர்க்கத் தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை ஏப்ரல் 26, 2016 அன்று உத்தரவிட்டது.

தார்மீகப் பண்புகளைக் கற்றுக்கொடுப்பதில் திருக்குறளுக்கு நிகரான இலக்கியப் படைப்பு உலகில் இல்லை. எனவே திருக்குறளில் உள்ள காமத்துப்பாலைத் தவிர்த்து அறத்துப்பால், பொருட்பாலில் உள்ள 108 திருக்குறள் அதிகாரங்களும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை வரும் கல்வியாண்டு முதலே பாடத்திட்டத்தில் தேவையான விளக்கத்துடன் சேர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்றத்தால் அரசுக்கு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது.

இதையடுத்து, 2018 -2019 கல்வியாண்டிலிருந்து கல்வித்துறை வல்லுநர்களால் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டு, ஆறாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்ப் பாடப் புத்தகங்களில் அறத்துப்பால், பொருட்பால் அதிகாரங்களில் (பள்ளி மாணவப் பருவ வயதிற்குப் பொருத்தமற்றவையான அதிகாரங்கள் சில தவிர்க்கப்பட்டு) தேர்ந்தெடுக்கப்பட்ட 275 குறள்கள் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. குறள்கள் தக்க விளக்கத்துடன் இடம்பெறுவது மட்டுமின்றி தேர்வில், 15 முதல் 20 மதிப்பெண்கள் வழங்கும் நடைமுறையையும் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. திருக்குறளின் பெருமையைப் பரப்பும் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டு அரசின் பள்ளிப் பாடத்தில் 12 வகுப்புகளில் 3ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ்ப் பாடத்திட்டத்தில் திருக்குறள்கள் இடம்பெறுகின்றன.

தமிழ்நாடு அரசுப் பள்ளிக்கல்வித் துறையின் தமிழ்ப் பாடநூல் 1 முதல் 12 வகுப்புகளுக்கான (https://archive.org/details/1-12_20220309/) நூல்களைப் பார்வையிட்டதில் மூன்றாம் வகுப்பு முதற்கொண்டே திருக்குறள் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் உள்ளது.

* 3ஆம் வகுப்பிற்கும் 4ஆம் வகுப்பிற்கும் திருக்குறள் கதைகள் (5 குறள்களுக்கு - 5 படக் கதைகள்) என்ற அளவில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

* 5ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் "பண்புடைமை" அதிகாரத்திலிருந்து '5 குறள்கள்' கற்பிக்கப்படுகின்றன.

* 6, 7, 8, 9ஆம் வகுப்புகள் பயிலும் மாணவர்களுக்கு 30 குறள்கள் தனிப்பாடங்களாகவும் இலக்கியம், இலக்கணம் ஆகியவை கற்பிக்கப்படும்பொழுதும், உரைநடை, கதைகள் இவற்றிலும் குறள்கள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. (எடுத்துக்காட்டாக அணி இலக்கணப் பாடங்களிலும் கல்வி குறித்த பாடம், அறிஞர்கள் கட்டுரைகள் ஆகியவற்றில் குறள்கள் இடம்பெறுவதைக் காண முடிகிறது).

* 10, 11, 12 ஆம் வகுப்புகள்பயிலும் மாணவர்களுக்கு 40 குறள்கள் தனிப் பாடங்களாகவும், இவற்றுடன் இலக்கியம், இலக்கணம் ஆகியவை கற்பிக்கப்படும்பொழுதும், உரைநடை, கதைகள் இவற்றிலும் குறள்கள் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

அறத்துப்பால் மற்றும் பொருட்பால் அதிகாரங்களில்; பெரும்பாலான அதிகாரங்களில், அதிகாரத்திற்கு 2 குறள்கள் வீதம் குறள்கள் இடம்பெறுகின்றன. குறைந்தது அதிகாரம் ஒன்றிற்கு ஒரு குறள் என்ற அளவிலாவது பாடத்திட்டத்தில் குறள்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. கல்வி, அறிவு உடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, வெகுளாமை, செய்ந்நன்றியறிதல், ஒப்புரவறிதல், வலியறிதல், பொருள் செயல்வகை ஆகிய அதிகாரங்களில், ஒவ்வொரு அதிகாரத்திலும் பாதி அதிகாரம் அல்லது 5 குறள்கள் பாடத்திட்டத்தில் உள்ளன.

எனவே, பள்ளிக்கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 1330 குறட்பாக்களில் 275 குறள்கள் (20% குறள்கள்) அறிமுகமாகி இருக்கும், அவற்றில் 85 குறள்கள் மனப்பாடப் பகுதி செய்யுள்களாகவும் அமைந்துள்ளன. இத்துடன் நன்னெறி வகுப்புகளிலும் திருக்குறள் கருத்துகள் எடுத்துச் சொல்லப்பட்டால் மேலும் மாணவர்களை நல்வழிப்படுத்தத் திருக்குறள் உதவும் என்பதில் ஐயமில்லை.

****

37

அமெரிக்கா

குறள் யாரை வழி நடத்துகிறது?

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறள் எக்காலத்துக்கும் ஏற்ற அறவுரைக் கருத்துகளைக் கொண்டுள்ளது என்பது குறள் அறிந்த அனைவரது கருத்தாகவும் இருக்கிறது. குறள் கருத்துகள் யாரை நோக்கிச் சொல்லப்படுகிறது? யாருக்கான அறிவுரைகளாக அவை இருக்கின்றன என்பதைத் திருக்குறளின் அதிகாரங்களின் தலைப்புகள் மூலமே மேலோட்டமாக எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

அறத்துப்பாலின் துறவு, தவம், நீத்தார் பெருமை, கூடாவொழுக்கம் போன்ற அதிகாரங்கள் துறவறம் மேற்கொண்டவர்களை நோக்கி எழுதப்பட்டது என்றாலும், இவற்றில் சில குறட்பாக்கருத்துகள் ஏனையோருக்கும் பொருந்துபவை.

இவ்வாறே, பொருட்பாலின் செங்கோன்மை, கொடுங்கோன்மை, இறைமாட்சி, ஒற்றாடல், அமைச்சு, தூது, நாடு, அரண், படை மாட்சி, படைச் செருக்கு போன்றவை ஆட்சியாளர்களுக்கான அறிவுரைகளாக அமைவதைக் காணலாம். இவற்றிலும் சில குறள்கள் பொது மக்களுக்கும் பொருந்துபவை. அதேபோல மக்கள் அனைவருக்கும் என எழுதப்பட்ட மற்ற பிற அதிகாரங்களிலும் வேந்தன் குறித்த குறிப்புகள் ஆங்காங்கே இருப்பதைக் காண இயலும். சற்றொப்ப நூறு குறள்கள் அரசாட்சி செய்பவருக்கானவை.

காமத்துப் பால் குறள்கள் அனைத்தும்; அவற்றுடன் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், பிறனில் விழையாமை, பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர் ஆகிய அதிகாரங்கள் இல்லறம் மேற்கொள்பவர்களுக்கானவை. இவற்றில் காமத்துப்பால் குறள்களை ஆண் கோணத்தில் காதலன் கூற்றாகவும்; பெண் கோணத்தில் காதலியின் கூற்றாகவும் அமைத்து எழுதி இருப்பார் வள்ளுவர். இல்வாழ்க்கை அதிகாரத்தில் சில குறள்கள் பொதுவானவை. மாறாக, வாழ்க்கைத் துணைநலம் மற்றும் வரைவின் மகளிர் அதிகாரங்கள் பெண்களின் பண்புகள் குறித்தவை. பிறனில் விழையாமை மற்றும் பெண்வழிச் சேறல் பெண்களுடன் கொள்ளும் தொடர்பு குறித்து ஆண்களின் கோணத்தில் ஆண்களுக்குக் கூறும் அறிவுரைகளாக எழுதப்பட்டவை. ஆகவே, இந்த அதிகாரங்களின் குறள்கள் பெண்கள் குறித்து இருந்தாலும் அவை பெண்களுக்கானவை அல்ல, பெண்களுக்குப் பெருமை சேர்ப்பவை எனக் கூறவும் இயலாது.

காமத்துப்பாலின் களவியல் காதலன் காதலிக்காக ஏங்குவதாக அமைந்திருக்க; காமத்துப்பாலின் கற்பியல் குறள்கள் காதலி பிரிந்து சென்ற தனது காதலனை

நினைத்து வருந்துவதாகவே அமைகின்றன. கற்பியலில் களவியலை விட இரண்டு மடங்குக்கும் மேலான எண்ணிக்கையில் அதிகாரங்கள் உள்ளதால் பெண்கோணத்தில் எழுதப்பட்ட குறள்களும் மிகுதி. காமத்துப்பால் அதிகாரங்கள் அறம் பொருள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டு இருப்பதன் காரணத்தால் வாழ்க்கை நெறி என்று பள்ளிப்பருவத்து மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த இயலாதவை. வயது வந்த பின்னர் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை. காமத்துப்பால் தவிர்த்து திருக்குறளில் உள்ள பிற அதிகாரங்கள் யாவும் கல்வி, கேள்வி, நட்பு, பண்பு, செல்வம் போன்று பொதுமையான கருத்துகளுடன் மக்கள் எவருக்கும் பொருந்துபவை; இவற்றின் கருத்துகள் வாழ்வியல்நெறிகளாக இளம்பருவத்தினருக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டியவை.

குறள்கள் யாரை நோக்கி / யாருக்காக எழுதப்பட்டிருக்கின்றன, ஒரு குறள் ஆணைக் குறிப்பிடுகிறதா / ஆணுக்கானதா / ஆணின் கூற்றாகஉள்ளதா, பெண்ணைக் குறிப்பிடுகிறதா / பெண்ணுக்கானதா / பெண்ணின் கூற்றாக உள்ளதா, அல்லது பொதுவாக அமைந்துள்ளதா என்று குறள்களை வகைப்படுத்தி அனைத்துக் குறள்களையும் ஆய்வு செய்வது குறள் எழுதப்பட்ட காலத்தில் மக்களின் சூழ்நிலையையும் வாழ்வியல் நிலையையும் அறிய உதவும். எடுத்துக்காட்டாகக் குறள்களை வகைப்படுத்தும் முறை;

பொது:

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

(பொருட்பால்; தெரிந்து தெளிதல்: குறள் – 504)

ஆண்:

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(பொருட்பால்; குற்றங்கூறாமை: குறள் – 435)

பெண்:

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

(அறத்துப்பால்; வாழ்க்கைத் துணைநலம்: குறள் – 55)

....வளரும்

****

அமெரிக்கா

38

குறள் யாரை வழி நடத்துகிறது?

குறளில் ஓர் ஆய்வு:

பொதுமறை என்று சிறப்பிக்கப்படும் திருக்குறளின் 1330 குறள்களையும் ஆணைக் குறிப்பிடுகிறதா, பெண்ணைக் குறிப்பிடுகிறதா அல்லது பொதுவாக அமைந்துள்ளதா என்று வகைப்படுத்தி ஆராய்ந்ததில்;

"எவருக்கும் பொருந்தும் வகையில் எழுதப்பட்ட குறள்கள் 61%; ஆண்களைக் குறிப்பிட்டு ஆணுக்காக எழுதப்பட்டவை அல்லது ஆணின் கோணத்தில் எழுதப்படவை 25%; பெண்களைக் குறிப்பிட்டு ஆணுக்காக எழுதப்பட்டவையோ அல்லது பெண் கோணத்தில் எழுதப்பட்டவையோ 14%.

"தனித்தனியாக முப்பாலுக்கும் இதேவகையில் ஒப்பிடுகையில்; அறத்துப்பால் மற்றும் பொருட்பால் குறள்களில் இதே விழுக்காடுகளின் நீட்சியைக் காண இயலவில்லை [('அறம்' - பொது: 74%, ஆண்: 23%, பெண்: 3%); 'பொருள்'- பொது: 76%, ஆண்: 22%, பெண்: 2%)].

"இந்த வேறுபாட்டிற்குக் காமத்துப்பால் குறள்கள் யாவும் ஆண்கோணத்திலோ அல்லது பெண் கோணத்திலோ எழுதப்பட்டதனால் மட்டும் அல்ல; காமத்துப்பாலில் பெண் கோணத்தில் எழுதப்பட்ட குறள்கள் சற்றொப்ப மூன்றில் இரண்டு பங்கு (68%) என்று மிகுதியான அளவில் இருக்கும் நிலைதான் காரணம் ('இன்பம்' - பொது: 0%, ஆண்: 32%, பெண்: 68%).

பெண்கள் தங்கள் காதலனின் பிரிவுத்துயர் உரைப்பதாக அதிக அளவில் எழுதப்படும் நோக்கம் பெண்களின் வாழ்க்கையைக் குடும்பம், கணவன் என்ற வட்டத்திற்குள் அடக்கும் முயற்சியாகக் கொள்ளலாம். இதைப் புரிந்து கொண்டால் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், பிறனில் விழையாமை, பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர் என்று முப்பாலின் அறம் பொருள் ஆகிய பால்களில் உள்ள பிற அதிகாரங்களிலும் ஏன் ஆண்களை முதன்மைபடுத்தி அவர்கள் பார்வையில் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது என்பதைப் புரிந்து

கொள்ள இயலும்.

"இதனைக் கருத்தில் கொண்டு; காமத்துப்பாலைத் தவிர்த்துவிட்டு அறம்+பொருள் (1,080) குறள்களை மட்டும் கணக்கில் கொண்டால் ('அறம்-பொருள்' - பொது: 75%, ஆண்: 23%, பெண்: 2%) என்ற அளவில் குறள்கள் உள்ளன. அதாவது, பெண்களுக்கான 'குரலாக' 2% குறள்கள் திருக்குறளில் உள்ளன.

திருக்குறளில் பெண்கள் பற்றிய குறள்களும்; கற்பியலில் காதலி தனது காதலன் பிரிந்தான் என்ற பிரிவுத்துயருடன் என் அழகு அழிந்தது, உறக்கம் வரவில்லை, தோள் மெலிந்தது, வளை கழன்றது, பசலை நோய் படர்ந்தது, கண்ணீர் வற்றியது, நடை தளர்ந்தது, எனது இத்தகைய நிலைக்குக் காரணமான என் காதலர் ஓர் இரக்கமற்ற கொடியவர் என்று குற்றம் சாட்டியவாறு சலிப்பைத் தரும் வகையில் நெஞ்சே, நிலவே, இரவே என்று ஒவ்வொன்றையும் காதலி அழைத்து அரற்றும் புலம்பல்கள்.

எனவே, வள்ளுவர் காலத்தில் பெண் குடும்பத்திற்கும் கணவனுக்கும் ஏற்ற வகையில் பணிவிடை செய்பவளாக இருக்க வேண்டும், கொழுநன் தொழுதெழுபவளாக, காதலனை நினைத்து காதல் ஏக்கம் கொண்டவளாக இருக்க வேண்டும் என்ற வட்டத்திற்குள் அவர்கள் வாழ்க்கை அமைய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது.

பொதுவாகக் காண்கையில், மக்களுக்கான வாழ்வியல்நெறிகளை வழங்கும் திருக்குறளில் பெரும்பான்மையான குறள்களை, அதாவது 815 குறள்களை வள்ளுவர் எவருக்கும் பொருந்தும் வகையில் பொதுநோக்கில் அமைத்து எழுதியுள்ளார் என்பதுவே திருக்குறளின் தனிச்சிறப்பு.

....வளரும்

****

- தேமொழி
அமெரிக்கா

குறள் சொல்லும் கிழக்கு

இன்று கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று திசைகளை நாம் அடையாளம் காண்கிறோம். சிந்துவெளி ஆய்வாளர் திரு. ஆர்.பாலகிருஷ்ணன் இதைச் சிந்துவெளியின் திராவிடப் பரிமாணம் என்பதற்குச் சான்றாகக் காட்டி இருப்பார். இந்த மேல்-மேற்கு, கீழ் - கிழக்கு என்பதற்கும் சிந்துவெளி நகர வடிவமைப்பில் இருக்கும் முக்கியமான தொடர்பினை "சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" என்ற அவருடைய நூலில் விளக்கி இருப்பார். சிந்துவெளி நகர்கள் இருபகுதிகளை உள்ளடக்கியவை என்றும், மேற்கே உயரமான பகுதியில் கோட்டை போன்ற கட்டிடங்கள் அமைந்த நகரின் பொது நிர்வாகக் கட்டமைப்பும்; அதன் அருகில் கிழக்கே உள்ள தாழ்ந்த பகுதியில் பொதுமக்கள் வாழ்ந்த குடியிருப்புகள் இருந்தன என்றும் தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இயற்கையிலேயே மேற்கில் உயர்ந்த நிலப்பகுதி இல்லாவிட்டாலும் செயற்கையாக அப்பகுதியை உயர்த்தி கோட்டை அமைத்து சிந்துவெளி மக்கள் வாழ்ந்து இருக்கிறார்கள்.

"சிந்துவெளி ஒரு வன்பொருள் என்றால் சங்க இலக்கியம் அதைப் புரிந்து கொள்ள உதவும் ஒரே மென்பொருள்" என்ற கருத்தையும் முன்வைக்கும் ஆர். பாலகிருஷ்ணன் "சிந்துவெளியைப் புரிந்துகொள்ள உதவும் திறவுகோல் சங்க இலக்கியம்தான்" என்று சங்க இலக்கியம் சிந்துவெளிப் பண்பாடு தொடர்பு குறித்து முடிந்த முடிவாகவும் குறிப்பிடுவார். இதற்குப் பல சங்க இலக்கிய மேற்கோள்களைக் காட்டும் ஆர். பாலகிருஷ்ணன், திசைகள் குறித்த சான்றாக சங்க இலக்கிய வரிகளையும் மேற்கோள்களாகத் தருவார்.

குறுந்தொகைப் பாடல் (337) காட்சியில், தலைவி வளர்ச்சியுறும் முலையையும், அவளுடைய தலையின் தழைத்த கூந்தல் தாழ்ந்து தொங்கும் அளவிற்கு இளமைப்பருவம் கொண்டவள் என்பதை;

"முலையே முகிழ்முகிழ்த்தனவே, தலையே
கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந்தனவே"

என்ற வரிகள் கூறும். இதில் 'கிழக்கு' என்ற சொல் திசையைக் குறிக்காது. மாறாக, தரையைத் தொடுவது போல தலைவியின் கூந்தல் 'தாழ்ந்து' கீழே நீண்டு தொங்குவதைக் குறிக்கிறது. கிழக்கு என்பது இங்கு கீழ் என்ற பொருள்

கொள்கிறது. (வேர்ச்சொல் ஆய்வுகள் தரையின் கீழ் இருப்பதால் அச்செடி கிழங்கு எனப்படுகிறது என்று விளக்குவது போல, கிழக்கும் அவ்வாறான அடிப்படையில் உருவான சொல்.)

சங்க இலக்கியத்தில் 'கிழக்கு' என்ற சொல் மூன்று முறை இடம் பெறுகிறது. அவை கீழ் என்ற பொருளில் மட்டுமே இடம் பெறுகின்றன. மேலே காட்டப்பட்ட குறுந்தொகை பாடல் தவிர்த்து;

பொன் செய் வள்ளத்து பால் கிழக்கு இருப்ப (நற். 297/1)

(பாலானது கீழே பொன்னால் செய்யப்பட்ட கிண்ணத்தில் இருக்க)

குடுமி எழாலொடு கொண்டு கிழக்கு இழிய (பதி. 36/10)

(போர்க் களத்தில் பறவை கீழே தரை இறங்கும் காட்சி)

ஆகிய பாடல்களில் வரும் 'கிழக்கு இருப்ப', 'கிழக்கு இழிய' ஆகிய சொற்களும் 'கீழே' என்ற பொருளில்தான் பயன்படுத்தப் பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தில் திசையைக் குறிப்பிடும் கிழக்கு மேற்கு என்பதற்கு, முறையே குண, குட (எடுத்துக்காட்டு: குணபுலம். குடவாயில்) என்ற சொற்களே எங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், கிழக்கு மேற்கு என்ற சொற்களால் திசைகள் குறிப்பிடப்படவே இல்லை. குறிப்பாக, மேற்கு என்ற சொல் சங்கப்பாடல்களில் இடம் பெறவும் இல்லை.

குண குட கடலா எல்லை (புறம். 17/2; மதுரை. 71)

குண கடல் முகந்து குடக்கு ஏர்பு இருளி (நற் 153/1; நற் 346/1)

குண கடல் கொண்டு குட கடல் முற்றி (மது. 238)

போன்ற பாடல் வரிகள் மூலம் சங்கப் பாடல்களில் திசைகள் குறிப்பிடப்பட்ட முறையை அறியலாம்.

வள்ளுவரும் திருக்குறளில் கிழக்கு என்ற சொல்லை கீழ் என்ற பொருளில் தான் பயன்படுத்துகிறார்.

செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை
காணிற் கிழக்காந் தலை. (குறள் – 488)

பகைவர்க்கு முடிவுகாலம் வந்து அவர்கள் தாமாகவே தலைகீழாகக் கவிழ்ந்திடும் உரிய நேரம் வரும் வரையில் தங்களின் பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்லவேண்டும் என்பது காலம் அறிந்து செயல்படுவது குறித்து வள்ளுவர் வழங்கும் அறிவுரை.

****

- தேமொழி
அமெரிக்கா

வள்ளுவர் பார்வையில் எவையெவை கோடி பெறும்

40

ஔவையின் தனிப்பாடல் ஒன்று 'நான்கு கோடி பாடல்' என்று அறியப்படுகிறது. அரசன் இட்ட கட்டளைப்படி ஓர் இரவுக்குள் நான்கு கோடிப் பாடல்களை எப்படிப் பாடுவது என்று சோழமன்னனின் அவைக்களப் புலவர்கள் கலங்கியதாகவும் அப்பொழுது, ஔவையார் நான்கு வரிகளைக் கொண்ட இப்பாடலைச் சொல்லி, இப்பாடல் சொல்லும் வாழ்வியல் நெறி ஒவ்வொன்றும் கோடிப்பொன்னுக்குச் சமம் என்று கூறியதாகவும் அக்கதை அறியப்படுகிறது.

மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று
மிதியாமை கோடி பெறும்;
உண்ணீர் உண்ணீர் என்றே ஊட்டாதார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்;
கோடி கொடுத்தும்குடிப் பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்;
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

(ஔவையார் தனிப் பாடல்:42)

இப்பாடலில் ஔவையார் வாழ்வியல்நெறிகளாக நான்கு செயல்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றும் ஒரு கோடி பொன்னுக்குச் சமம் எனக் கூறுகிறார். அவை முறையே; தன்னை மதிக்காதவர்களின் வீட்டுக்குச் சென்று அவ்வீட்டு வாசலை மிதிக்காமல் இருப்பது. உண்ண வருமாறு வருந்தி அழைக்காதவர்களின் வீட்டில் உண்ணாமல் இருப்பது. கோடி கொடுத்தாலும் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுடன் சேர்ந்திருப்பது. எத்தனை கோடி கொடுத்தாலும், தான் சொன்ன சொல் தவறாமல் இருப்பது.

'மிதியாமை', 'உண்ணாமை' ஆகிய அறிவுரைகள் செய்யாதீர் என்று எதிர்மறை கருத்துகளாகவும் நல்ல குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்! சொன்ன சொல் தவறாமல் வாழ்! என்பன உடன்பாட்டுக் கருத்துகளாகவும் அமைந்துள்ளன. இந்த வரிகள், ஒருவரது குடிப்பிறப்பும் நற்பண்புகளும் எவ்வளவு விலைமதிப்பற்றவை என்பதை உணர்த்துகின்றன.

வாழ்வியல் நெறிகளை வகுத்தளித்த வள்ளுவர் ஔவையார் போல எவையெவை கோடி மதிப்புப் பெறுபவை என்று கூறுகிறார் என்று அறிய விரும்பித் திருக்குறளை ஆராய்ந்தால் வள்ளுவத்தில் 10 குறள்கள் கோடி பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றில் இரண்டு குறள்கள் (குறள்கள் - 554, 559) கோடி என்ற எண்ணிக்கையைக் குறிப்பிடாமல் மன்னனின் வளைந்த செங்கோல் (கோல்கோடி) என்ற கொடுங்கோன்மை ஆட்சியைக் குறிப்பிடுகின்றன, இவற்றில் கோடி என்பது வளைந்த என்ற பொருள் தருபவை. இவ்விரண்டையும் தவிர்த்துவிட்டால் எட்டு குறள்கள் பின்வரும் கருத்துகளைச் சொல்கின்றன:

1. அறிவற்றவரின் தீங்கு விளைவிக்கும் நட்பை விட, அறிவுடையவரிடம் கொண்டிருக்கும் பகை அதைவிடக் கோடி மடங்கு மேலானது (816);

2. சிரித்துப் பேசி நடிப்பவர்களின் நட்பால் விளையும் தீங்கைவிடப் பகைவர்களால் ஏற்படும் துன்பம் பத்துகோடி மடங்கு நன்மையானது (817);

3. தவறாக வழிநடத்தும் அமைச்சரை விட எழுபது கோடி எதிரிகள் பக்கத்தில் இருப்பது எவ்வளவோ மேலானது (639);

4. இரக்கச் சிந்தையுடன் ஒருவர் பொருளுதவி செய்ய முன்வந்தாலும் அவரிடமும் சென்று இரவாமல் இருப்பது கோடி மடங்கு உயர்வுடையதாகும் (1061);

5. கொடுத்து உதவும் பண்பில்லாதவரிடம், கோடி கோடியாகச் செல்வம் இருந்தாலும் அதனால் எவருக்கும் பயனில்லை (1005);

6. பலகோடிப் பொருள் கொடுத்தாலும் நற்பண்பு நிறைந்த குடியில் பிறந்தவர் தன் குடிப்பெருமையைக் குலைக்கும் செயலைச் செய்ய மாட்டார் (954);

7. ஒரு பொழுதுகூட வாழ்க்கையைப் பற்றி உண்மையைச் சிந்தித்து அறியாதவர்களே, ஆசைக்கோர் அளவின்றிக் கோடிக்கும் மேலான எண்ணங்களுடன் மனக் கோட்டைகள் கட்டுவார்கள்;

8. ஒருவர் முயன்று கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்தாலும் அவரிடம் எது தங்குமோ அதன் பயனை மட்டுமே அவரால் துய்க்க இயலும் (377).

****

41

- தேமொழி
அமெரிக்கா

வள்ளுவர் பார்வையில் எவையெவை கோடி பெறும்

கோடி என்ற சொல் இடம்பெறும் குறள்களும் அவற்றுக்கு மு.வரதராசனார் வழங்கிய தெளிவுரையையும் அடுத்துக் காணலாம்:

1. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். (குறள் – 816)

அறிவில்லாதவனுடைய மிகப் பொருந்திய நட்பை விட அறிவுடையவரின் நட்பில்லாத தன்மை கோடி மடங்கு நன்மை தருவதாகும்.

2. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். (குறள் – 817)

(அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில்) நகைக்கும் தன்மை உடையவரின் நட்பை விட, பகைவரால் வருவன பத்து கோடி மடங்கு நன்மையாகும்.

3. பழுதெண்ணும் மந்திரியின் பக்கதத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும். (குறள் – 639)

தவறான வழிகளை எண்ணி கூறுகின்ற அமைச்சனை விட எழுபது கோடி பகைவர் பக்கத்தில் இருந்தாலும் நன்மையாகும்.

4. கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும். (குறள் – 1061)

உள்ளதை மறைக்காமல் உள்ளம் மகிழ்ந்து கொடுக்கும் கண்போல் சிறந்தவரிடத்திலும் சென்று இரவாமலிருப்பதே கோடி மடங்கு நல்லதாகும்.

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடியுண் டாயினும் இல். (குறள் – 1005)

பிறர்க்குக் கொடுத்து உதவுவதும்தான் நுகர்வதும் இல்லாதவர்க்கு மேன்மேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை.

6. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர். (குறள் – 954)

பல கோடிப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான குற்றங்களைச் செய்வதில்லை.

7. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப

கோடியும் அல்ல பல. (குறள் – 337)

அறிவில்லாதவர் ஒரு வேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை. ஆனால், வீணில் எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்கள்.

8. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி

தொகுத்தார்க்கு துய்த்தல் அரிது. (குறள் – 377)

ஊழ் ஏற்படுத்திய வகையால் அல்லாமல் முயன்று கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்தவருக்கும் அவற்றை நுகர முடியாது.

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும் என்று ஔவையும்; அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் என்று வள்ளுவரும் நற்குடி பிறந்தவர் சிறப்பைப் பாராட்டுகிறார்கள்.

****

- தேமொழி
அமெரிக்கா

42

எண் குணத்தானும் கம்பரும்

திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் இடம்பெறும் 9ஆவது குறள்;

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" – (குறள்.9)

எண்குணங்களை உடையவன் (அதாவது கடவுள் அல்லது வழிகாட்டியின்) திருவடிகளைப் பணிந்து வணங்காதவர் தலையானது செயல்திறனற்ற மெய், வாய், கண், மூக்கு, செவி முதலானவைபோல் செயலிழந்த ஐம்புலன்களை ஒத்திருக்கும் ஒரு பயனற்ற தலையாக; அதாவது அறிவற்ற தலையாகக் கருதப்படும் என்ற பொருள் வருமாறு தமிழறிஞர் பலர் தெளிவுரை எழுதிச் சென்றுள்ளனர்.

இதில் 'எண்குணம்' என்பதற்குப் பொருள் விளக்கம் தருவதில் பல கருத்து மாறுபாடுகளும் உள்ளன.

[1] பெரும்பாலோர் எண்குணம் என்றால் என்ன என்று பொருட்படுத்தாமல் விவரிக்காமல் "எண்குணத்தைக் கொண்டவர்" என்று சொல்லியோ அல்லது சொல்லாமலோ கடந்து விடுவார். மு.கருணாநிதி, மு.வரதராசன், வ.சுப.மாணிக்கம் ஆகியோர் தெளிவுரை தரும் முறை இது.

[2] குறளுக்கு உரை தந்த தொல்லாசிரியர்களான மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர் ஆகிய மூவரும் எண் = எட்டு என்று பொருள் கொள்வர். எனவே, எண்குணத்தைக் கொண்டவர் என்றால் எட்டு குணங்களைக் கொண்டவர் எனப் பொருள் விளக்கம் தர முற்படுவர். அதனால் அவர்களுக்கு எண்குணங்கள் யாவை என்ற விளக்கம் தரும் கட்டாயமும் ஏற்படுகிறது.

(பரிமேலழகர் உரை: எண்குணங்களாவன: தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது). இருப்பினும், சைவாகமத்தில் சிவனின் குணங்களாகக் காட்டப்படுவது சமண அருகரின் குணங்களே என்று ஆய்வாளர்கள் கூறுவர். இதுபோன்ற தரவுகள் வள்ளுவரைத் தத்தம் சமயப் பின்புலத்துடன் காணும் முயற்சி எனலாம். பௌத்தம் அருளும் எட்டு வழிமுறைகளைப் பின்பற்றி வாழும் குணமுடையவர் என்று பௌத்தருக்கும் வள்ளுவரை உரிமை கொண்டாட வாய்ப்புள்ளது என்பதை மறுக்க இயலாது.

[3] எண்=எளிய என்ற பொருள் கூறப்படுதலும் உண்டு. இம்முறையில், எண்குணத்தான் என்பது 'எளிமைக் குணமுடையவன்' என்று பொருள் கொள்ளப்படுகிறது. எண்பொருளவாகச் செலச்சொல்லி (குறள் 424) என்ற குறள் விளக்கம்போல, மேலும் சில குறள்களையும் (எண்பதத்தால் ஓராமுறை செய்யா மன்னவன், எண்பதத்தால் எய்தல் எளிதென்ப) காட்டி, 'எண்' எளிய என்ற இப்பொருள் கொள்ளும் முறைக்கு மேற்கோள்

காட்டப்படுகிறது. இம்முறையில், எண்குணத்தான் என்பவன் அறிந்துணர்வதற்குரிய எளிமையான குணங்களையுடையவன் இறைவன் என்பது பொருள்.

[4] அன்பர்கள் எண்ணும் அல்லது நினைக்கும் குணங்களையுடையவன் அல்லது அன்பர்கள் எண்ணும் குண வடிவை ஏற்பவன் என்ற பொருளில் எண்குணத்தான் என்பதற்கு எண்குணம் கொண்டவர் என்ற பொருள் விளக்கத்தை முதன் முதலில் தந்தவராகக் காலிங்கர் அறியப்படுகிறார். சாலமன் பாப்பையாவும் “எண்ணும் நல்ல குணங்களுக்கு எல்லாம் இருப்பிடமான கடவுளின் திருவடிகளை வணங்காத தலைகள், புலன்கள் இல்லாத பொறிகள்போல, இருந்தும் பயன் இல்லாதவையே” என்றுதான் பொருள் கொள்வார்.

மக்களால் நினைப்பதற்குரிய குணங்களை ஏற்பவர்; அதாவது மாந்தர் எண்ணிய குணம் கொண்டவரே இறைவன். கடவுளுக்கு உருவங்களும் குணங்களும் தருபவர் மனிதர்கள்தாம் என்ற அடிப்படை உண்மையை இவ்விளக்கம் முன் வைக்கிறது. கடவுள் என்பவருக்கு வெறும் எட்டு குணங்கள் மட்டும்தானா என்று ஆழ்ந்து சிந்தித்து வினா எழுப்புபவருக்கு அன்பர்கள் எண்ணும் குணவடிவை ஏற்பவன் எண்குணத்தான் என்ற இந்த விளக்கமே ஏற்புடையதாக இருக்கும். எண்குணத்தான் என்பது எண்ணிய குணத்தை உடைய இறைவன் என்ற பொருள் கொள்வோமெனில், அதே கருத்தைக் கம்பரும் கூறுவதைக் காண முடிகிறது.

"ஒன்றே யென்னின் ஒன்றேயாம் பலவென்று ரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னின் அன்றேயாம் ஆமேயென்னின் ஆமேயாம்
இன்றேயென்னின் இன்றேயாம் உளதென்றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா"

[யுத்த காண்டம், கடவுள் வாழ்த்து, கம்பராமாயணம்]

இதன் பொருள்: கடவுள் ஒருவரே என நம்பிக்கை உள்ளவர்களுக்குக் கடவுள் ஒருவன்தான்; வெவ்வேறு கடவுள்களாக நம்புவோருக்குப் பலவாகத் தோற்றமளிக்கிறார். அஃதாவது கடவுள் எல்லா உயிர்களையும் இயக்கும் ஒரு தனிப் பெரும் ஆற்றல் என்பதால் ஒன்றே என எண்ணுவோருக்கு ஒன்றாக விளங்குகிறார். பல உயிர்களிலும் உறைந்து உள்ளமையால் பல என எண்ணுவோருக்குப் பலவாகத் திகழ்கிறார். கடவுளுக்கு இன்னின்ன தன்மைகள் இல்லை என்றால் இல்லைதான். மாறாகக் கடவுளிடம் இன்னின்ன தன்மைகள் உள்ளன என்றால் உள்ளனவே. கடவுளே இல்லை என்றாலும் இல்லைதான். கடவுள் உள்ளதாகக் கருதினால் உள்ளவனே. இப்படி எல்லாத் தன்மையாகவும் தோன்றும் கடவுள் நிலை பெரிதே. சிற்றறிவுடைய நம்மால் இறைநிலையை உணர்ந்து பிழைக்கும் வழியாதோ!

இவ்வாறாக, ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லார்க்குப் பல நாமம் சூட்டி அழைப்பதும் மக்கள் வழக்கம் என்பதைக் கருத்தில் கொண்டு இறைவனை உருவமாகவும் அருவமாகவும் உளதாகவும் இலதாகவும் கற்பிக்கும் பாடல்களுள் ஒன்றாகக் கம்பரின் பாடலும் அமைந்துள்ளது. இப்பாடலில் எண்ணுவோர்க்கு எண்ணும் வகையிலானவர் கடவுள் என்கிறார் கம்பர்.

****

– தேமொழி
அமெரிக்கா

குறளின் ஈற்றடிகள்

திருக்குறளின் வெண்பாக்கள் ஏழு சீர்களைக் கொண்டு இரண்டே அடிகளில் அமைந்த குறள் வெண்பாக்கள். ஈற்றடி அல்லது இறுதி அடி முச்சீராலும் ஏனையடி நாற்சீராலும் வெண்பா இலக்கணப்படி அமைந்தவை வள்ளுவரின் குறட்பாக்கள். "ஈற்றடிமுச்சீராகவும், மற்றையடி நாற்சீராகவும் பெற்று, காய்ச்சீர், மாச்சீர், விளச்சீர்களும் இருவகைவெண்டளைகளுங் கொண்டு, மற்றைச் சீரும் தளையும் பெறாமல் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று வருவதே வெண்பாவின் பொது இலக்கணமாம்" என்று வரையறுக்கிறது இலக்கண நூல்.

ஈற்றடி ஒன்று கொடுக்கப்பட்டு அதற்கு வெண்பாக்கள் எழுதுவது மரபுப்பாக்கள் புனைவோர் இடையே நடக்கும் ஓர் அறிவார்ந்த போட்டி. 'பாரதி சின்னப்பயல்' என்று கொடுக்கப்பட்ட ஈற்றடிக்குத் தன் பதினைந்தாம் வயதிலேயே வெண்பா புனைந்து அவையோரை வியக்கவைத்தவர் மகாகவி சுப்ரமணிய பாரதி.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற சொற்றொடர், மனம் போனபடி புனைகதைகள் பல கதைக்கப்படும் இன்றைய இணைய உலகில் இன்று பலருக்கும் அறிவுறுத்தப்படும் சொற்றொடர். இது குறளின் புகழ் பெற்ற ஈற்றடி. இதுபோலக் குறளின் பல ஈற்றடிகளே தனித்து நின்று பழமொழி போல ஒரு வாழ்வியல் நெறியையோ, மாறாத உலக உண்மையையோ உணர்த்திச் செல்லும். யாவரும் அறிந்த பல ஈற்றடிகள் இருப்பினும் 'கனி இருப்பக் காய் கவர்ந்தற்று', 'அறனல்ல செய்யாமை நன்று', 'பயனில சொல்லாமை நன்று' போன்ற ஈற்றடிகள் தனித்து நின்றே நன்னெறியைக் குறிப்பிடுவன.

சில குறட்பாக்களின் ஈற்றடிகளைச் சொன்னாலே குறள் முழுமையையும் சொல்லத் தேவையின்றி நினைவிற்கு வரும் வகையில் புகழ்பெற்ற ஈற்றடிகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, 'நிற்க அதற்குத் தக', 'நாவினால் சுட்ட வடு', 'சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' போன்ற ஈற்றடிகள் அத்தகைய சிறப்பு கொண்ட ஈற்றடிகள்.

தான் எழுதிய 1330 குறட்பாக்களில் வள்ளுவர் சில ஈற்றடிகளை மீண்டும் மீண்டும் பயன் கொண்டுள்ளார். சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் 26 குறட்பாக்களின் ஈற்றடிகள் மற்றொரு குறளின் இறுதி அடியாகவும் உள்ளது. இணைக்கப்பட்டுள்ள குறள் அட்டவணை அவ்வாறு ஒரே ஈற்றடிகளைக் கொண்டவற்றைப் பட்டியலிட்டுள்ளது.

எண்	ஈற்றடி	குறள் எண்
1.	ஆக்கம் பலவுந் தரும்.	492, 522
2.	உட்பகை உற்ற குடி.	887, 888
3.	உள்ளினும் உள்ளஞ் சுடும்.	799, 1207
4.	எழுமையும் ஏமாப் புடைத்து.	126, 398
5.	ஏதம் படுபாக்கு அறிந்து.	136, 164
6.	ஏதம் பலவுந் தரும்.	275, 884, 885

எண்	ஈற்றடி	குறள் எண்
7.	ஏதிலர் என்னும் இவ்வூர்.	1129, 1130
8.	ஒல்லை உணரப் படும்.	826, 1096
9.	கண்ணோட்டம் இல்லாத கண்.	573, 574
10.	கோடாமை சான்றோர்க் கணி.	115, 118
11.	செய்யாமை மாசற்றார் கோள்.	311, 312
12.	திண்மை உண்டாகப் பெறின்.	54, 988
13.	தீரா இடும்பை தரும்.	508, 510
14.	துன்பத்துள் துன்பங் கெடின்.	369, 854
15.	துன்பம் உறுதல் இலன்.	628, 629
16.	தேரினும் அஃதே துணை.	132, 242
17.	தொகையறிந்த தூய்மை யவர்.	711, 721
18.	தொல்கவின் வாடிய தோள்.	1234, 1235
19.	நன்றி பயவா வினை.	439, 652
20.	பண்புடைமை என்னும் வழக்கு.	991, 992
21.	மருளானாம் மாணாப் பிறப்பு.	351, 1002
22.	மறைபிறந்து மன்று படும்.	1138, 1254
23.	மெய்ப்பொருள் காண்பது அறிவு.	355, 423
24.	வாழ்வாரின் வன்கணார் இல்.	276, 1198
25.	வேளாண்மை செய்தற் பொருட்டு.	81, 212

'ஏதம்பலவுந் தரும்' என்ற ஈற்றடி மூன்று முறை திருக்குறளில் இடம் பெறக் காணலாம். இவை தவிர்த்த மற்றவை இரண்டிரண்டு முறைகள் வள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளன. ஒரே ஈற்றடிகள் ஒரே அதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளன.

உட்பகை அதிகாரத்தின் 'உட்பகை உற்ற குடி' என்ற ஈற்றடியும்; காதல் சிறப்புரைத்தல் அதிகாரத்தின் 'ஏதிலர் என்னும் இவ்வூர்' என்ற ஈற்றடியும்; நடுவு நிலைமை அதிகாரத்தின்' கோடாமை சான்றோர்க் கணி என்ற ஈற்றடி போன்றவை ஒரே அதிகாரத்தில் இடம்பிடிக்கும் ஈற்றடிகள். இவ்வாறு ஒரே அதிகாரத்தில் அமையாத ஈற்றடிகளும் உள்ளன.

சொல்லுக்குச் சொல் மாற்றமின்றி அமையும் இத்தகைய ஈற்றடிகள் தவிர்த்து, சற்றேறக் குறைய ஒத்திருக்கும் ஈற்றடிகளைக் கொண்டவையாக மேலும் 8 குறட்பாக்களும் உள்ளன. அவற்றுள் சில: 'தாழாது உஞற்றுபவர்' (620) - 'தாழாது உஞற்றுபவர்க்கு' (1024); 'நல்குரவு என்னும் நசை' (1043) - 'நல்குவர் என்னும் நசை' (1156); 'மாசறு காட்சி யவர்'(199) - 'மாசறு காட்சி யவர்க்கு' (352) போன்றவை சில எடுத்துக்காட்டுகளாகும்

இவ்வாறு அமையும் ஈற்றடியைக் கொண்ட குறட்பாக்களை ஒப்பிட்டுக் கொடுக்கப்பட்ட ஈற்றடி மூலம் வள்ளுவர் சொல்ல வரும் கருத்து என்ன? அவர் என்ன வலியுறுத்த விரும்புகிறார்? என்ன நோக்கத்தில் கையாண்டுள்ளார் என்று ஆராய்வது மேலும் பயனுள்ள வகையில் அமையும்.

****

குறளின் ஈற்றடிகள்

எண்	ஈற்றடி	குறள் எண்
1.	ஆக்கம் பலவுந் தரும்.	492, 522
2.	உட்பகை உற்ற குடி.	887, 888
3.	உள்ளினும் உள்ளஞ் சுடும்.	799, 1207
4.	எழுமையும் ஏமாப் புடைத்து.	126, 398
5.	ஏதம் படுபாக்கு அறிந்து.	136, 164
6.	ஏதம் பலவுந் தரும்.	275, 884, 885
7.	ஏதிலர் என்னும் இவ்வூர்.	1129, 1130
8.	ஒல்லை உணரப் படும்.	826, 1096
9.	கண்ணோட்டம் இல்லாத கண்.	573, 574
10.	கோடாமை சான்றோர்க் கணி.	115, 118
11.	செய்யாமை மாசற்றார் கோள்.	311, 312
12.	திண்மை உண்டாகப் பெறின்.	54, 988
13.	தீரா இடும்பை தரும்.	508, 510
14.	துன்பத்துள் துன்பங் கெடின்.	369, 854
15.	துன்பம் உறுதல் இலன்.	628, 629
16.	தேறினும் அஃதே துணை.	132, 242
17.	தொகையறிந்த தூய்மை யவர்.	711, 721
18.	தொல்கவின் வாடிய தோள்.	1234, 1235
19.	நன்றி பயவா வினை.	439, 652
20.	பண்புடைமை என்னும் வழக்கு.	991, 992
21.	மருளானாம் மாணாப் பிறப்பு.	351, 1002
22.	மறைபிறந்து மன்று படும்.	1138, 1254
23.	மெய்ப்பொருள் காண்பது அறிவு.	355, 423
24.	வாழ்வாரின் வன்கணார் இல்.	276, 1198
25.	வேளாண்மை செய்தற் பொருட்டு.	81, 212

****

சிவிகைப் பயணமும் அறவழியும்

தேமொழி

44

வள்ளுவர் தன் குறளின் தொடக்கமாக உள்ள 'பாயிரம்' பகுதியின் 4 அதிகாரங்களில்; முதலில் இறைவணக்கம், வான்மழை போற்றுதல், உலகப் பற்றை நீத்தவர் பெருமை ஆகிய கருத்துக்களைக் கூறிவிட்டு அடுத்து அறநெறிப்படி வாழ்வதன் முக்கியத்துவத்தை 'அறன்வலியுறுத்தல்' அதிகாரத்தில் மூலம் எடுத்துரைக்கிறார். திருக்குறளின் நோக்கமே அறவாழ்வை, ஒழுக்க நெறிகளை மக்களிடம் கொண்டு செல்வது என்பதால் அறன்வலியுறுத்தல் அதிகாரத்தின் குறள்கள் யாவும் அறவாழ்வின் மேன்மைக்குக் கொடுக்கப்படும் முக்கியமான ஓர் அறிமுக உரையாகக் கொள்ளலாம். இதன் பின்னரே அறத்துப் பாலில் இல்லறவியல், துறவறவியல் ஆகிய இயல்கள் அடுத்தடுத்து இடம் பெறுகின்றன.

அறன்வலியுறுத்தல் அதிகாரத்தின் பொருளைச் சுருக்கமாகச் சொன்னால்; குற்றமில்லாத மனதுடன், மற்றவரை எந்த வழியிலும் வருத்தாமல், பிறருக்கு உதவும் நோக்கத்துடன் நற்செயல்கள் செய்வதுதான் அறவொழுக்கமாகும் எனப் புரிந்து கொள்ளலாம். தன்னல நோக்கோடு அறம் செய்யாமல், ஈத்துவக்கும் இன்பத்திற்காக மட்டுமே அறம் செய்வதை வள்ளுவர் 'ஈகை' அதிகாரத்தில் குறிப்பிடுகையில், பிறரிடம் இரந்து வாழ்வதைத் தவிர்த்து விடுக, மேலுலகம் செல்வதை ஒரு குறிக்கோளாகக் கொண்டு செய்யாமல் தன்னால் முடிந்தவரை பிறருக்குக் கொடுத்து உதவுவதே உயர்ந்த பண்பு;

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.
(குறள் – 222)

என்று குறிப்பிடுவார். பலன் கருதா நோக்கில் அறம் செய்பவர் என்பதை ஓர் அளவுகோலாகக் கொண்டு அறன் வலியுறுத்தல் குறள்களை ஆராய்ந்தால், நற்செயல் நோக்கம் மட்டுமே என்ற வகையில் ஆறு (32, 33, 34, 35, 39, 40) குறள்களும்; தன்னலப் பயன் கருதி செய்வனவாக மூன்று (31, 36, 38) குறள்களையும் தெளிவாக வகைப்படுத்திவிட முடியும்.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.
(குறள் – 37)

என்ற குறள் பொருள்மயக்கம் தரும் குறளாகும். இதற்குப் பொருள் கொள்வோர் பொருள் கொள்ளும் முறையில் குறளின் கருத்து மாறுபடலாம். இது போன்ற சூழ்நிலையில் உரையாளர்கள் பொதுவாகவே குறளின் சொல்லுக்குச் சொல் பொருள் சொல்லிக் கடந்துவிடுவதும் வழக்கம். எடுத்துக்காட்டாக; "பல்லக்கை சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா" என்று மு. வரதராசன் பொருள் கொள்வதைக் காண முடிகிறது.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . . .

சிவிகைப் பயணமும் அறவழியும்

44

தேமொழி

இக்குறளுக்கு இம்மையில் செய்யும் அறச்செயல் மறுமையில் நல்வாழ்வு தரும் என்ற (அறவிலை வணிகம்) பிறவிப்பயன் கோட்பாட்டின் அடிப்படையில் பொருள் சொல்லப்படும். முன்னைவினையின் பயன் என்ன என்பதைப் பல்லக்கு சுமப்பவனையும் அதில் பயணிப்பவனையும் பார்த்தாலே தெரியும், பயணிப்பவன் முற்பிறவியில் செய்த நல்வினையால் பல்லக்கில் செல்லும் நிலையில் உள்ளான், அவனைச் சுமப்பவர்கள் அறச்செயல் செய்யாததால் மற்றவரைச் சுமக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள் என்று பொருள் விளக்கம் கொடுக்கப்படுவது வழக்கம். இவ்வாறு பொருள் கொண்டால் இது நற்பயன் கருதி அறவழியில் நடக்க வலியுறுத்தும் பிரிவில் இக்குறளை வகைப்படுத்தலாம். இது வினைப்பயன் சார்ந்த ஒன்று. மணக்குடவர், பரிதி, காலிங்கர், பரிமேலழகர், ஆகிய அனைத்துத் தொல்லாசிரியர்களும் இந்த வினைக்கோட்பாட்டுக் கருத்துத் தோன்ற உரை எழுதியுள்ளனர். இக்காலத் தமிழ் அறிஞர்களுள்ளும் தேவநேயப் பாவாணர், வ.உ.சிதம்பரம், கா.சுப்பிரமணியம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம், சுத்தானந்த பாரதியார், சாமி சிதம்பரனார் ஆகியோருக்கும் இக்கருத்து ஏற்புடையதாகவே இருந்துள்ளது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான். (குறள் – 1062) என்று இயலாமையில், வறுமையில் உள்ளவருக்காக வருந்தி, பிச்சை எடுத்தாவது ஒருவர் வாழ வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், இந்த உலகைப் படைத்த கடவுளும் பிச்சையெடுத்து அலைந்து கெட்டுத் தொலைக என்று கடுமையாகக் கூறும் வள்ளுவரா துன்பத்தில் உழல்வது ஒருவர் செய்த முன்வினைப்பயன் என்பார் என்ற கேள்வியும் எழுகிறது.

இக்குறளுக்குப் பொருள் சொல்லும் குன்றக்குடி அடிகளார்; இக்குறள் "சிவிகை ஊர்ந்து செல்வோன் தூக்கிச் செல்வோனிடையில் உள்ள வேறுபாட்டை அறத்தின் பயன் என்று கூறும் பழக்கம் உடைய சமுதாயத்தை மறுத்துக் கூறியது. "உள்ளது மறுத்தல்" என்ற குறிக்கோளுடையது இப்பா. பொறுத்தல் துன்பம் தருவது. அறத்தில் வளர்ந்தவர்கள் மற்றவர் துன்புறுதலை அதுவும் தமக்காகத் துன்புறுதலை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படியே ஏற்றுக் கொண்டால் அறம் பிழைத்துப் போய் விடுகிறது என்பார்" [உதவி:குறள்திறன் தளம்].

ஆகவே; அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை என்பதன் பொருள்,

சிவிகை பொறுத்தானோடு = பல்லக்கைச் சுமப்பவனுக்கும் அவன் உதவியோடு

ஊர்ந்தான் இடை = அப்பல்லக்கில் பயணிப்பவனுக்கும் இடையில் உள்ள தொடர்பை நோக்கும் பொழுது

அறத்தாறு இதுவென வேண்டா = அறவழி இதுதான் என்று எண்ணுதல் வேண்டாம்

அதாவது, பல்லக்கைச் சுமந்து செல்பவர்களையும் அதில் பயணிப்பவரையும் காணும் பொழுது, சொல்லாமலே எது அறவழி என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஒரு சிலரை நோகச் செய்து அவர் வாழ்வில் தங்களை மேம்படுத்திக் கொள்வது அறவழியும் அல்ல அது அறவாழ்வும் அல்ல.

பல்லக்கில் பட்டினப் பிரவேசம் செய்ய விரும்பும் ஆதீனங்கள் உள்ள இக்காலத்தில், அறவோர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர் பல்லக்கில் பயணிப்பது அறம் பிழைபட்ட செயல் என்று உறுதியாக மறுத்துக் கூறியவரும் ஓர் ஆதீனத்தின் தலைவர் என்பது இங்குக் கவனத்திற்கு உரியது.

சேரமானின் பண்டையோர் கூற்று

தேமொழி

45

சேரநாட்டின் முடியுடை வேந்தர்களுள் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனார் என்பவர் 63 நாயன்மார்களுள் ஒருவராக வைத்துப் போற்றப்படுபவர். சைவ நூல்களின் தொகுப்பான 11 ஆம் திருமுறையின் பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா ஆகிய மூன்று நூல்கள் இவரால் இயற்றப்பட்டவையாகும். இப்பெருமாக் கோதையாரே கழறிற்றறிவார் என அறியப்படுபவரும் ஆவார். இவர் சுந்தரரின் நண்பராகவும், சிவனைத் தொழ அவருடன் திருக்கயிலை சென்றதாகவும் அறியப்படுகிறார். அருணகிரிநாதர் அவருடைய திருப்புகழில் சேரமான் பெருமாள் நாயனாரை "ஆதிஅந்தவுலாவாசு பாடிய சேரர்" என்று குறிப்பிடுவார்.

இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகவும், இறைவனைத் தொழும் உயிர்களை அத்தலைவன் மீது காதல் கொண்ட பெண்களாகவும் "நாயகி-நாயக பாவம்" என்ற அமைப்பில் எழுதப்படும் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது "திருக்கயிலாய ஞானவுலா". உலகைத் தோற்றுவித்து ஆட்டுவிக்கும் இறைவன்பால் எல்லா உயிரினங்களும் அன்பு கொண்டு திளைத்து இறைவனால் ஆட்கொள்ளப்படுவதைக் குறிக்கும் வகையில் எழுதப்பட்டது திருக்கயிலாய ஞானவுலா.

சேரமான் பெருமாள் நாயனார் தமக்கு முன் வாழ்ந்த திருமுறையாசிரியர்கள் அருளிய பொருளுரைகளை இவ்வுலாவில் பல விடங்களிலும் எடுத்தாண்டுள்ளார். திருநாவுக்கரசர், காரைக்கால் அம்மையார் ஆகியோர் வாய்மொழிகளைத் தழுவி அவர் எழுதிய வரிகளைப் போலவே திருவள்ளுவர் குறள்களையும் இவர் எடுத்தாண்டுள்ளார்.

திருவுலா செல்லும் சிவபெருமானின் பேரழகைக் கண்டு மயங்கிய பெண்கள் பாடும் பாடல்களாக அமைந்த இந்த நூலின் மூலம் சேரமான் பெருமாள் திருக்குறளால் ஈர்க்கப்பட்டவர் என்பதை அறிய முடிகிறது.

"கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்

ஒண்டொடி கண்ணே யுளவென்று- பண்டையோர்

கட்டுரையை மேம் படுத்தாள்"

[திருக்கைலாய ஞானவுலா: 173-174 கண்ணிகள்]

இதன் பொருள்; நாம் கண்டும், கேட்டும், சுவைத்தும், மோந்தும், தீண்டியும் துய்க்கக் கூடிய ஐந்து புலன்களாகிய இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன என்று மூத்தோர் சொல்லும் வாய்மொழியை ஒத்த தோற்றத்தினை உடையவள், இறைவனையும் கவரும் தோற்றம் கொண்டவள் எனப் பேரிளம் பெண்ணின் (33 - 40 வயதுடையவள்) இயல்புரைக்கும் பொழுது,

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்தொடி கண்ணே உள.

[களவியல், புணர்ச்சி மகிழ்தல்: குறள் - 1101]

கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாகிய இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன (மு. வரதராசன் உரை).என்ற குறளை எடுத்தாண்டு இருப்பார். வள்ளுவரை பண்டையோர் என்று பெருமிதம் கொள்கிறார் சேரமான் பெருமாள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . . .

சேரமானின் பண்டையோர் கூற்று

தேமொழி

45

முன்பக்கம் தொடர்ச்சி . . . . .

அவ்வாறே;

"இல்லாரை யெல்லாரும் எள்குவார் செல்வரை

எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னுஞ் – சொல்லாலே

அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்

மல்கிய சாந்தொடு பூண்புனைந்து "

[திருக்கைலாய ஞானவுலா: 136 – 137 கண்ணிகள்]

என்ற வரிகளில்; பொருள் இல்லாத ஏழைகளை எத்தகையோரும் இகழ்வர், செல்வரை எல்லோரும் சிறப்பு செய்வர் என்ற உலக வழக்கை அறிந்திருப்பதனால், இறைவன் தன் மீது மையல் கொள்ள வேண்டும் என்பதற்காக அவள் தன் மிக உயர்ந்த இடையில் மேகலையைச் சுற்றிக் கட்டி, தன் அழகிய மார்பின் மேல் மிக்க மணம் வீசும் சந்தனக் கலவையைப் பூசி மேலும் பல அணிகலன்களை அணிந்து கொண்டாள் என அந்த அரிவையின் (20 – 25 வயதுடையவள் அரிவை) அணிநலன்களைப் புலப்படுத்துகிறார். அவ்வரிகளில்,

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை

எல்லாரும் செய்வர் சிறப்பு.

கூழியல், பொருள்செயல்வகை: குறள் – 752]

பொருள் இல்லாதவரை எல்லாரும் இகழ்வார், செல்வரை எல்லாரும் சிறப்பு செய்வர் (மு. வரதராசன் உரை) என்ற குறளையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளமை பொய்யில் புலவர் அருளிய திருக்குறளில் சேரமான் பெருமாள் நாயனார் கொண்ட பேரார்வத்தை இனிது புலப்படுத்துவதாகும் என்பார் வெள்ளைவாரணனார்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவத்து மகளிரும் தன்னைக் கண்டு காமுற்று மயங்கும் நிலையில் தலைவனொருவன் உலாப்போவது ஒரு தலைக் காமமாகிய கைக்கிளைத் திணையைச் சார்ந்தது. இக் கைக்கிளைச் செய்திகள் பரத்தையர்க்கு அன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாதவை என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

வள்ளுவர் குறிப்பிடும் தலைவி இல்லறம் மேற்கொண்ட ஒரு குலமகள் என்ற வகையில் இது வேறுபடுகிறது. தலைவியைக் குலமகள் எனக் காட்டும் முகமாகத்தான் வள்ளுவர் குறள்கள் அமைந்துள்ளன. அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பரத்தையர் என்ற பிரிவில் அடங்கும் பொதுமகளிரை "வரைவின் மகளிர்" (வரைவு= திருமணம்; ஓர் ஆணுடன் திருமண உறவு இன்றியும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற வாழ்க்கை மேற்கொள்ளாதவருமான பொதுப்பெண்டிர், பொருள் பெண்டிர்) என்ற அதிகாரத்தின் கீழ் வள்ளுவர் தனியாகக் குறிப்பிடுகிறார்.

பார்வை நூல்: பன்னிரு திருமுறை வரலாறு (இரண்டாம் பகுதி: 8 – 12 திருமுறைகள்), வித்துவான் க. வெள்ளைவாரணன். பக்கம் 603. தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1969.

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

46

வாழ்வியல் கருத்துக்களை ஏழு சீர்களிலும் இரண்டே அடிகளிலும் சுருங்கக் கூறும் சிறப்புடையது திருக்குறள். ஆழமான கருத்துச் செறிவாலும் பல அணிநயம் கொண்டு இலக்கியச்சுவையுடன் அமைந்திருக்கும் காரணத்தாலும் மேலும் சிறப்பு கொண்டு விளங்குகிறது. அணி என்பது இலக்கியத்தில் அழகுக்கு அழகுக் கூட்டும் முறையாகக் கருதப்படுகிறது.

"மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்

ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல்"

என்று பவணந்தி முனிவர் எழுதிய நன்னூல் (நன்னூல் 55) பாயிரம் அழகுக்கு அழக்கூட்டுவதைக் குறிப்பிடுகிறது.

அணி என்றால் உவமையணி என்றே தொல்காப்பியம் குறிப்பிட்டாலும், பிற்காலத்தில் அணி இலக்கணம் விரிவடைந்து மேலும் பற்பல அணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறளில் சொல்லும் கருத்தை மற்றொரு பொருளுடன் ஒப்பிட்டு விளக்கும் முறையில் "உவமையணி" கொண்ட குறள்களாகப் பல குறள்கள் உள்ளன. மேலும்; எடுத்துக்காட்டு உவமை அணி, இல்பொருள் உவமை அணி, தொழில் உவமை அணி, உருவக அணி, ஏகதேச உருவக அணி, நிரல்நிறை அணி, பின்வருநிலையணி, வஞ்சப் புகழ்ச்சி அணி, பிறிதுமொழிதல் அணி, வேற்றுமை அணி போன்ற அணிகளும் திருக்குறளில் இடம் பெறுகின்றன. இவையாவும் பள்ளிப்பாடங்களில் இலக்கண வகுப்பில் பயிற்றுவிக்கப்பட்டவையே.

ஒரே சொல் மீண்டும் மீண்டும் ஒரு குறளில் வரும் "பின்வருநிலையணி" என்ற முறையையும் வள்ளுவர் கையாண்டுள்ளார். வாய்விட்டுப் படிக்கும் பொழுது அவற்றின் ஓசைநயம் படிப்பவரைக் கவரும் வகையில் இக்குறள்கள் அமைந்துள்ளன. பாவலர் உணர்த்த விரும்பும் செய்தியை எளிதாகவும், அழகாகவும், கேட்பவர் மனதில் பதியும்படி சொல்வதற்கு ஒரேசொல் மீண்டும் மீண்டும் பலமுறை இடம் பெறும் வகையில் "பின்வருநிலையணியில்" செய்யுள்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஒரே சொல் வெவ்வேறு எண்ணிக்கையில் பல குறட்பாக்களில் இடம்பெற்றுள்ளன.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு. (350)

என்ற இக்குறளில் 'பற்று' என்ற ஒரே சொல் 6 முறை இடம் பெற்றுள்ளது. குறளின் ஏழு சீர்களில், ஆறு சீர்களில் பற்று என்ற சொல் இடம் பெறுகிறது. பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும் என்பது இக்குறளின் பொருள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . .

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

46

முன்பக்கம் தொடர்ச்சி . . . . .

இது போன்றே, ஒரே சொல் 5 முறை ஐந்து குறட்பாக்களிலும், 4 முறை 22 குறட்பாக்களிலும், 3 முறை 27 குறட்பாக்களிலும் அமைந்துள்ளன என்று திருக்குறள் குறித்துப் பல புள்ளிவிவரங்கள் தரும் கட்டுரைகள் குறிப்பிடுகின்றன.

செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ, பொருளோ, சொல்லும் பொருளோ மீண்டும் மீண்டும் வந்து அழகு சேர்ப்பது 'பின்வரு நிலையணி'. இப் பின்வருநிலையணி மூன்று வகைப்படும்:

1. சொல்லும் பொருளும் பின்வருதல் – சொற்பொருள் பின்வருநிலையணி.

2. சொல் மட்டும் தொடர்ந்து வருதல் – சொல் பின்வரு நிலையணி

3. சொற்கள் மாறி, ஆனால் பொருள் ஒன்றாக வருதல் – பொருள் பின்வரு நிலையணி

> எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணியர் ஆகப் பெறின். (666)

எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர் என்பது இக்குறள் சொல்லும் பொருள். எண்ணிய என்ற சொல் திரும்பத் திரும்ப வரும் இடங்களில் ஒரே பொருளில் வந்துள்ளமையால் இக்குறள் 'சொற்பொருள் பின்வரும் நிலையணி' என்ற அணிக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது

> பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லை பொருள். (751)

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம். அஃது அல்லாமல் உலகில் சிறந்த பொருள் வேறு இல்லை என்பது இக்குறளின் பொருள். 'பொருள்' என்ற சொல் மட்டும் குறளில் தொடர்ந்து வேறு (மதிப்பு, செல்வம் ஆகிய) பொருள்களில் வருதலால் இக்குறளின் அணி 'சொல் பின்வருநிலை அணி' என்பதாக அமைந்துள்ளது.

> கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை. (400)

அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை என்பது இக்குறளின் பொருள். இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களும் செல்வத்தையே குறிக்கின்றன. எனவே; சொற்கள் மாறி, ஆனால் பொருள் ஒன்றாக வருதலால் இக்குறளில் 'பொருள் பின்வரு நிலையணி' இடம் பெற்றுள்ளது.

திருக்குறளின் 1330 குறள்களில் சற்றொப்ப நான்கு விழுக்காடு குறட்பாக்கள் 'சொற்பொருள் பின்வருநிலையணியிலும்' 'சொல் பின்வரு நிலையணியிலும்' வள்ளுவரால் இயற்றப்பட்டுள்ளன. இவையாவும் இலக்கிய ஆர்வலர்களுக்கு அறிவுவிருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

47

உவமை அணி:

திருக்குறளில் "உவமை" என்ற சொல் வருவது ஒரே ஒரு முறைதான்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (குறள் – 7)

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனின் திருவடிகளைப் பற்றிக் கொள்பவர்கள் மட்டுமே மனக்கவலை நீங்கப் பெறுவார்கள் என்பது இக்குறள் தரும் பொருள். இவ்வாறு ஒரே ஒருமுறை 'உவமை' பற்றிப் பேசும் திருக்குறளில் நூற்றுக்கணக்கான உவமைகள் எடுத்தாளப் பட்டுள்ளன. திருக்குறளில் காணப்படும் உவமை நயம் குறித்து நூல்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன.

இலக்கண நூல்கள் உவமை அணியே முதன்மை அணி என்று விளக்குகின்றன. புலவர் ஒருவர் தாம் பிறருக்குக் கூறக் கருதிய பொருளை (உவமேயம்) தெளிவாக உணர்த்தும் பொருட்டு, மற்றவர்களும் நன்கு அறிந்த பொருள் ('உவமை' அல்லது 'உவமானம்') ஒன்றின் பண்பு,தொழில், பயன் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுத் தம் பாடலின் கருத்தை விளக்கிக் கூறுவது உவமையணியின் இலக்கணம். ஆக, ஒப்பிடப்படும் பொருள் உவமேயம்; ஒப்பிடப் பயன்படும் பொருள் உவமை. உவமை அணியில் நான்கு உறுப்புகள் இருப்பதைக்காணலாம். அவை, 1) உவமை; 2) உவமேயம்; 3) உவமை உருபு; 4) ஒத்த பண்பு.

ஒரு பொருளோடு ஒரு பொருளும்; ஒரு பொருளோடு பல பொருளும்; பல பொருளோடு பல பொருளும்; பல பொருளோடு ஒரு பொருளும் என நான்கு வகையாகப் பொருள்கள் ஒப்புமைப்படுத்திக் கூறப்படும். பெரும்பாலும் உவமையையும் உவமேயத்தையும் இணைப்பதற்கு 'போன்ற, போல, ஒப்ப' முதலிய உவம உருபுகளில் ஒன்று பயன்படுத்தப்படும்.

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத்து உருபே (நன்னூல் நூற்பா – 367)

என்பது உவம உருபுகள் குறித்து நன்னூல் தரும் இலக்கணம்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (783)

பொருள்: நல்ல நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருவது 'போல' பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும். இதில், பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும் என்ற உவமேயம், போல என்ற உவம உருபால், நல்ல நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தரும் என்ற உவமையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

பண்பு, தொழில், பயன் என மூவகை ஒப்புமைகள்:

பொருள்களுக்கு இடையே உள்ள பண்பு ஒப்புமை, தொழில் ஒப்புமை, பயன் ஒப்புமை ஆகியவற்றின் அடிப்படையில் உவமை அணி வகைப்படுத்தப்படும். .

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . . .

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

47

முன்பக்கம் தொடர்ச்சி . . . . .

இதனால் பண்பு உவமை, தொழில் உவமை, பயன் உவமை என உவமை மூன்று வகைப்படும் என விளக்குகிறது தண்டியலங்காரம் நூற்பா.

பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை (தண்டி., நூற்பா. 30)

1. ஒரு பொருளின் வடிவம், நிறம், சுவை, அளவு ஆகியவை அப்பொருளின் 'பண்பு' எனப்படும். இப்பண்புகளின் அடிப்படையில் ஒப்புமைப் படுத்தப்படும் உவமை பண்பு உவமை ஆகும்; 2. ஒரு பொருளின் 'தொழில்' அல்லது செயல் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்; 3. ஒரு பொருளால் கிடைக்கும் 'பயன்' காரணமாக அமையும் உவமை பயன் உவமை எனப்படும்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர் (1121)

பொருள் : மென்மையான மொழிகளைப் பேசும் இப்பெண்ணின் வெண்மையான பற்களிடையே ஊறிய உமிழ்நீர், பாலும் தேனும் கலந்த சுவை போல் இனிமையானது– தலைவன் கூற்று. இது பண்பு உவமையணிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார் (691)

பொருள்: தீக்காய்வார் அகலாது அணுகாது இருப்பதுபோல் அரசர்களைச் சார்ந்திருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற குறள் தொழில் உவமை அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (215)

தன்னலமற்ற தொண்டுள்ளம் கொண்டவரின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியை ஒத்ததாகும். இக்குறள் பயன் உவமையணிக்கான எடுத்துக்காட்டு.

உவமையணியானது எடுத்துக்காட்டு உவமையணி என்றும் இல்பொருள் உவமையணி என்றும் மேலும் இருவகையாகப் பிரிக்கப் படுதலும் உண்டு.

எடுத்துக்காட்டு உவமையணி: எடுத்துக்காட்டு உவமை அணி என்பது உவமானத்தையும் உவமேயத்தையும் தனி வாக்கியங்களாக அமைத்து இது பொருள் இது உவமை என்பது விளக்கப்படுகையில் இடையில் அதுபோல என்னும் உவமஉருபு கொடுக்காமல் ஒப்பிடுவது.

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் (573)

பொருள்: பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? அது போலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

இல்பொருள் உவமை அணி: இல்லாத ஒன்றை இருப்பது போல கற்பனை செய்து அதனை உவமையாகக் காட்டுவது இல்பொருள் உவமை அணி. அதாவது இல்பொருள் உவமையணி மறைபொருளில் வரும். வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று (273)

பொருள் : மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

மேலும் சில கருத்தைக் கவரும் அணி வகைகளும் திருக்குறளில் உள்ளன.

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

48

பிறிது மொழிதல் அணி:

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (495)

ஆழமான நீரினுள் இருக்கும் வரை நீர்நிலைக்கு வரும் மற்றைய உயிர்களை முதலை வெற்றி கொள்ளும்; ஆனால் நீரிலிருந்து வெளியே வந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்றுவிடும் என்பது இக்குறளின் பொருள்.

மக்களின் நல்வாழ்விற்கு வாழ்வியல் நெறிகளை விளக்க முடிவெடுத்த வள்ளுவர் அதை விட்டுவிட்டு ஏன் உயிரியல் ஆசிரியராகவும் ஆய்வாளராகவும் மாறினார்? அவருடைய நோக்கத்திற்குத் தொடர்பில்லாமல் முதலை குறித்து ஏன் பேசுகிறார் என்ற குழப்பம் ஏற்படலாம். ஆனால், ஒரு செயல் ஆற்றுவதற்கு ஏற்றதான இடத்தை அறிந்து அதன் பிறகே செயலைத் தொடங்க வேண்டும் என்பதை 'இடனறிதல்' என்ற அதிகாரத்தில் விளக்க முற்படும் வள்ளுவர் 'பிறிது மொழிதல் அணி' என்ற அணியை இக்குறளில் எடுத்தாள்கிறார். கூறக் கருதிய பொருளை உவமையால் குறிப்பாக உணர்த்தியதால் இது பிறிது மொழிதலாகிறது.

ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெறமுடியும்; ஆனால் தமக்குப் பொருத்தமில்லாத இடத்தில் வெற்றிபெறுதல் இயலாது என்னும் கருத்து இக்குறள் மூலம் உணர்த்தப்படுகிறது. ஆனால், இந்த உவமேயம் குறளில் சொல்லப்படவில்லை, முதலை உவமை மட்டும் விளக்கப்பட்டுள்ளது. பிறிது மொழிதல் அணியில் உவமை மட்டுமே இடம் பெறும். இவ்வாறாகத் தான் கூற விரும்பும் கருத்தை நேரடியாகக் கூறாமல், அதைப் புலப்படுத்தும் வகையில் வேறொரு கருத்தைக் கூறிப் புலப்படுத்துவதை,

கருதிய பொருள்தொகுத்து அதுபுலப்
படுத்தற்கு ஒத்தது ஒன்று உரைப்பின் அஃது
ஒட்டு என மொழிப

(தண்டி. நூ. 52)

என்று தண்டியலங்காரம் 'ஒட்டணி என்று விவரிக்கிறது. பிறிது மொழிதல் அணிக்கு நுவலா நுவற்சி, சுருங்கச் சொல்லல், தொகைமொழி, உவமப்போலி என்னும் வேறு பெயர்களும் உள்ளன. அகத்திணைப் பாடலில் இடம்பெறும் பிறிது மொழிதல் அணி உள்ளுறை உவமம் எனப்படுகிறது. எனவே உவமானத்தைக் கூறி விட்டு உவமேயத்தைக் கூறாமல் மறைபொருளாக, குறிப்பாக உணர்த்துதல் பிறிது மொழிதல் அணியாகும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . . .

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

48

முன்பக்கம் தொடர்ச்சி . . . . .

வேற்றுமை அணி:

இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது 'வேற்றுமையணி' எனப்படும்.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு (129)

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது. இக்குறளில் நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும்தன்மை உடையவை என்று கூறப்பட்டு, பின்னர், நெருப்பினால் சுட்ட காயம் ஆறிவிடும்; ஆனால், உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்று இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடும் கூறப்படுகிறது. எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

நிரல்நிறை அணி:

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது 'நிரல் நிறை அணி' (நிரல் = வரிசை; நிறை = நிறுத்துதல்) எனப்படும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

வஞ்சப்புகழ்ச்சி அணி:

ஒருவரைப் புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் 'வஞ்சப்புகழ்ச்சியணி' எனப்படும். 'மாறுபடு புகழ்நிலை அணி', 'புகழாப் புகழ்ச்சி அணி' என வஞ்சப்புகழ்ச்சி அணி இருவகைப் படுத்தப் படுகிறது.

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில் (839)

அறிவற்றவர்களுடன் கொள்ளும் நட்பு மிக இனியது; ஏனெனில், அவர்களிடம் இருந்து பிரிய நேர்ந்தால் அப்பிரிவு துன்பம் தருவதில்லை என்பது இக்குறளின் பொருள். இக்குறட்பாவில் அறிவிலார் உறவைப் புகழ்வது போல் பழித்துக் கூறுகிறார் வள்ளுவர். ஆதலால் இக்குறள் வஞ்சப்புகழ்ச்சி அணியின் கீழ் வகைப் படுத்தப்படுகிறது. புகழ்வது போல் பழிக்கும் வஞ்சப்புகழ்ச்சி அணியை 'மாறுபடு புகழ்நிலை அணி' என தண்டியலங்காரம் கூறுகிறது.

அது போல; ஒன்றைப் பழித்துக் கூறுவது போன்ற முறையினால் ஒரு பொருளுக்கு மேம்பாடு தோன்றச் சொல்லுவது புகழாப் புகழ்ச்சி அணி.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று (1112)

அனைவரையும் பார்ப்பது தாமரை மலர். ஆனால், நெஞ்சே என்னை மட்டும் நோக்கும் என் தலைவியின் கண்கள் மலர்கள் போன்றது என்று நீ மயங்குவது சரியா? என்று நெஞ்சிடம் கூறுவது போல தலைவன் கூறுகிறான். எனினும் தலைவியின் கண்களைப் புகழாமல் புகழ்வதே தலைவனின் நோக்கம். ஆதலால், பழிப்பது போன்ற முறையில், அதன் மேன்மை தோன்றக் கூறும் 'புகழாப் புகழ்ச்சி அணி' க்கு இக்குறள் ஓர் எடுத்துக்காட்டாகும்.

திருக்குறளின் அணி இலக்கணச் சிறப்பு

தேமொழி

49

உருவக அணி:

உவமை வேறு உவமேயம் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது 'உருவக அணி'யாகும்.

> இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
> பார்தாக்கப் பக்கு விடும் (1068)

பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும் என்பது இக்குறளின் பொருள். உருவக அணியில் உவமேயம் முன்னும் உவமை பின்னுமாக அமைவதுடன், அவையிரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறப்படும்.

ஏகதேச உருவக அணி:

கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி. வடமொழிச் சொல்லான ஏகதேசம் (ஒரு பகுதி எனப்பொருள்படும்) சொல்லால் இது 'ஏகதேச உருவக அணி' எனப் பெயர் பெறுகிறது.

> சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
> ஏமப் புணையைச் சுடும் (306)

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும். உறவின் துணை மட்டுமே பாதுகாக்கும் தெப்பமாக உருவாகப்படுத்தப்பட்டுள்ளது.

பரிவருத்தனை அணி:

பாடலின் கருத்து ஒரு பொருளைக் கொடுத்து, வேறு ஒரு பொருளைக் கைம்மாறாகக் கொள்ளும் செய்தியைக் குறிப்பிடுவது பரிவருத்தனை அணி எனப்படும்.

> சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா
> நோயும் பசலையும் தந்து (1183)

தன் தலைவன் காதல் நோயையும், பசலை நிறத்தையும் கைம்மாறாகக் கொடுத்து விட்டு தன்னுடைய அழகையும், நாணத்தையும் எடுத்துக் கொண்டு பிரிந்து சென்று விட்டார் என்ற தலைவியின் கூற்று இப்பாடலின் பொருள். எனவே, இது தலைவன் தலைவிக்குக் கொடுத்தனவும், அவளிடம் இருந்து கொண்டனவும் சமமாய் இருத்தல் என்னும் முறையில் அமைந்த பரிவருத்தனை அணிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நிதரிசன அணி:

இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகளின் பயன், வேறு ஒரு பொருளுக்கு நன்மையோ, தீமையோ தோன்றுமாறு இருப்பதாகச் சொல்லுவது நிதரிசன அணியின் இலக்கணம் ஆகும்.

> குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
> மதிக்கண் மறுப்போல் உயர்ந்து (957)

மதிக்கப்படும் நற்குடியில் பிறந்தவரிடம் ஏதேனும் குறை இருந்தால் அது நிலவில் தெரியும் களங்கம் போல் பெரிதாகத் தெரியும் என்கிறது இக்குறட்பா. பெரியவர்களிடமும் குற்றம் உண்டு என்ற இயல்பை, அழகிய நிலவின் களங்கத்துடன் ஒப்பிட்டுக் கூறும் முறை நிதரிசன அணியின் இலக்கணத்தை ஒட்டி அமைகிறது.

குறள் சொல்லும் துணைவியின் பிரிவு

தேமொழி

50

திருமணம் முடிந்த தலைவனும் தலைவியும் மேற்கொள்ளும் கற்பு வாழ்க்கை வாழும் காலத்தில்; தலைவன் தலைவியைத் தனித்திருக்கச் செய்து பிரிந்து செல்லும் பிரிவு ஆறு வகைப்படும், அவை: 1. பரத்தையிற் பிரிவு (பரத்தையுடன் வாழ்தல்), 2. ஓதல் பிரிவு (கல்வி கற்க பிரிதல்), 3. காவல் பிரிவு (பாதுகாத்தல் தொழிலை முன்னிட்டு பிரிதல்), 4. தூதிற் பிரிவு (தலைவன் தூது செல்லுதல்), 5. துணைவயின் பிரிவு (போரில் துணைபுரிதல்), 6. பொருள்வயின் பிரிவு (பொருளீட்டச் செல்லல்) என்பன.

குறளில் காமத்துப் பாலில் வள்ளுவர் குறிப்பிடும் பிரிவு 'துணைவயின் பிரிவு' ஆகும். மன்னனுக்குப் பகைவர்களால் இடையூறு நேரும்பொழுது அவனுக்குத் துணைபுரியும் நோக்குடன் தலைவன் போருக்குச் செல்லும் பிரிவு இது. இலக்கண நூல்களின்படி அரசர், வணிகர், வேளாளர் என்னும் மூவருக்கும் துணைவயின் பிரிவு உரியது. இதற்குரிய பிரிவு காலம் ஓர் ஆண்டு ஆகும். அவ்வாறு போரில் துணைபுரிதல் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் அச்செயலின் காலம் நீட்டிக்கும் போது தலைவியை நினைந்து புலம்பலாம் என்றும் இலக்கணம் கூறுகிறது (கல்வி கற்கச் செல்லும் பொழுது தலைவன் தலைவியை நினைத்துப் புலம்புதல் கூடாது என்பது நம்பி அகப்பொருள் நூல் வகுக்கும் விதி).

திருக்குறள் காமத்துப்பால் குறட்பாக்களில் குறிப்பிடப்படும் தலைவன் ஒருவனா அல்லது வெவ்வேறு ஆண்களா? அவ்வாறே குறள்களில் குறிப்பிடப்படும் தலைவி ஒருத்தியைக் குறிக்கிறதா அல்லது அவர்கள் வெவ்வேறு பெண்களா? என்பதை நாம் உறுதியாகக் கூற இயலாது. ஆனால், வள்ளுவர் தன் வாழ்வையே வைத்து அதில் பெற்ற அனுபவங்களை வைத்து குறள் எழுதியிருக்கலாம், அல்லது தன் சூழலில் நிகழ்ந்தவற்றைக் கவனித்து அதன் அடிப்படையிலும் எழுதியிருக்கலாம். எனவே, அவர் குறிப்பிடும் தலைவன் யார் தலைவி யார் என்பதையும் அறுதியிட்டுக் கூற இயலாது.

இருப்பினும், குறள்களின் ஊடே அவர் விவரிக்கும் குறிப்புகளை வைத்து தலைவன் ஓர் உழவன், போர் நிகழும் காலத்தில் வேளாளர்களுக்கு அரசனின் அறிவிப்பு கிட்டியதும், அரசனுக்கு உதவியாகப் போர்முனைக்குச் சென்ற ஒரு வீரர் என்று புரிந்து கொள்ளத் தடையும் இல்லை. வள்ளுவர் உழவைப் போற்றுபவர். உழவுக்கு என்றே ஓர் அதிகாரத்தையும் ஒதுக்கி உள்ளார். மாறாக; ஓர் அரசன் ஆட்சி செய்யும் முறைகளையும் நாடாளும் முறைகளையும் விரிவாகப் பொருட்பாலின் பல அதிகாரங்களில் வள்ளுவர் விளக்குவதால் திருக்குறளில் ஒரு குறுநில மன்னனின் அரசாளும் அறிவுரைகளும் இடம் பெற்றிருக்கலாம் என்பதையும் மறுக்க வழியில்லை. ஆக, தலைவன் ஓர் உழவு செய்யும் வேளாளனாகவோ, அல்லது ஒரு வேந்தனின் கீழ் அவனுக்கு உதவும் பொருட்டு போருக்குச் சிற்றரசனாகவோ இருக்க வாய்ப்புண்டு.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . .

குறள் சொல்லும் துணைவியின் பிரிவு

தேமொழி

50

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

படைச்செருக்கு அதிகாரத்தில்;

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல்நின் றவர். (771)

பகைவர்களே என் தலைவனை (அரசனை) எதிர்த்து நிற்காதீர்கள்; அவனை எதிர்த்தவர்கள் உயிரிழந்து நடுகல்லாய்ப் போனவர்கள் பலர் என எச்சரிக்கிறான் ஒரு போர் வீரன்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (774)

கையிலிருந்த வேலினை யானையின் மீது வீசி விட்டதால் களத்தில் போரினைத் தொடர வேறு வேல் தேடும் வீரன், தன் மார்பின்மீதே ஒரு வேல் பாய்ந்திருப்பது கண்டு மிக்க மகிழ்ந்து அதனைப் பறித்துப் போரைத் தொடர்கிறான்.

படைச்செருக்கு அதிகாரம் காட்டும் வீரன் அகவாழ்வு எவ்வாறு இருக்கும் என்பதைக் காமத்துப்பால் குறள்கள் மூலம் அறியலாம். தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் ஈடுபடும் பொழுது தலைவனின் கூற்றாக;

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. (1088)

[காமத்துப்பால்–களவியல்–தகையணங்குறுத்தல்]

என்ற குறளைக் காணலாம். பகைவரையும் அஞ்ச வைக்கும் என் வலிமை என் காதலியின் ஒளி பொருந்திய நெற்றிக்குத் தோற்று அழிந்ததே என்று போர் வீரனாகிய தலைவன் வியக்கிறான்.

தலைவனுக்கும் தலைவிக்கும் திருமணம் முடிந்து இல்லறவாழ்வில் மகிழ்ந்திருக்கும் பொழுது அரசனின் ஆணைக்கிணங்க போர்முனைக்குச் செல்கிறான் தலைவன் (தலைவன் தலைவியை நீங்கி வேந்தன் ஆணையாற் பகைமேற் பிரியும் பிரிவைக் கூறும் அகத்துறை). அங்கே தலைவியின் நினைவில் புலம்புகிறான் என்று கற்பியல் குறள் மூலம் அறியலாம்.

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. (1268)

[காமத்துப்பால்–கற்பியல்–அவர்வயின் விதும்பல்]

அரசன் இப்போரில் வெற்றி பெறட்டும்; பின்னர் நான் இல்லம் திரும்பி என் மனைவியோடு கூடி மாலைப்பொழுதில் விருந்து உண்பேனாகுக என்று தலைவியுடன் மீண்டும் இல்லறம் தொடர விரும்பும் தலைவன் கூறுவதாக இக்குறள் அமைகிறது.

அவன் வரவை எதிர்நோக்கி இல்லத்தில் காத்திருக்கும் தலைவியின் கூற்றாக;

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். (1263)

[காமத்துப்பால்–கற்பியல்–அவர்வயின் விதும்பல்]

வெற்றியை விரும்பி ஊக்கத்தையே உறுதுணையாக எண்ணிச் சென்ற என் கணவர், திரும்பி வருவார் என்ற எண்ணத்தினால்தான் நான் இன்னும் உயிரோடு இருக்கின்றேன் என்று கூறுவதாக அவர்வயின் விதும்பல் (அவரிடம் விரைதல்) குறள் மூலம் அறிய முடிகிறது. தமிழ் இலக்கண நூல்கள் தரும் குறிப்புகளின்படி குறளின் காமத்துப்பால் தலைவன் போரில் துணைபுரிதல் காரணமாகப் பிரிந்து சென்றவன் என்று முடிவு செய்யலாம்.

வள்ளுவம் என்ற எடுத்துக்காட்டு களஞ்சியம்

தேமொழி

51

வள்ளுவர் குறளில் வாழ்வியல் நெறிகளை விளக்க பொருத்தமான எடுத்துக்காட்டுகளைக் கையாண்டுள்ளார். உலகம் போற்றும் நன்னெறி இவையிவை, பின்பற்ற வேண்டியவை இவை, உலகம் ஏற்கும் ஒழுக்கமுறை, இகழப்படும் நடைமுறை, தவிர்க்க வேண்டியவை, செயல்படுத்த வேண்டியவை எனப் பல பொருள்களை எடுத்துக்காட்டுகள் மூலமே விளக்கியுள்ளார். ஒப்பிட்டுக் காட்டப் பல உவமைகளைக் குறிப்பிட்டுள்ளார். உலக இயல்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த முறையை 'ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்' என்று தொல்காப்பியம் (மரபியல் நூற்பா 104) குறிப்பிடுகிறது.

இயற்கையில் இருந்தும், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், கருவிகள் எனவும் வள்ளுவரால் எடுத்துக்காட்டுகளாக, உருவகங்களாக உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குழல், யாழ், பறை, பாறை, மலை, குன்று, கல், மழை, நீர், கடல், ஊருணி, ஊற்று, மணற்கேணி, குளம், வெள்ளம், நிலம், நன்னிலம், களர்நிலம், வேலி, தீ, வானம், நிலவு, மதிமறைப்பு, மேகம், குவளை, அனிச்சம், மலர்கள், தளிர், நெருஞ்சி, பனை, தினை, நிழல், மரம், நச்சு மரம், பழுத்த மரம், பட்டமரம், மூங்கில், குன்றிமணி, கரும்பு, கருக்காய், எள், விதை, களை, பயிர், மீன், யானை, குதிரை, எருது, பசு, ஆட்டுக்கடா, புலி, நரி, முதலை, பாம்பு, எலி, புழு, கவரிமா, காக்கை, மயில், கொக்கு, அன்னம், ஆந்தை, ஆமை, வேடன், ஆயன், அரசன், அமைச்சர், ஒற்றர், தூதர், படைத்தளபதி, வீரர், பேடி, யானைப்பாகன், மருத்துவர், செவிலி, குழந்தை, புலவர், ஆசிரியர், மாணவர், மருத்துவர், நோயாளி, நல்லவர், தீயவர், செல்வந்தர், வறியவர், வள்ளல், கருமி, கொலையாளி, திருடர், கயவர், விலைமகளிர், தவம், தானம், வேள்வி, துறவி, தெய்வம், இறைவன், தேவர், எமன், பேய், அணங்கு, திருமகள், தவ்வை, பிணம், சொர்க்கம், நரகம், பகை, நட்பு, வில், வேல், வாள், காவடி, செங்கோல், ஊன்றுகோல், துலாக்கோல், அளவுகோல், தூண்டில், உரைகல், அரம், ஏர், எரு, அச்சாணி, வண்டி, தேர், சிவிகை, நாவாய், படகு, தெப்பம், தோணி, பளிங்கு, சதுரங்கம், கூத்தாடும் அரங்கு, சூதாட்டக் கழகம், சாக்கடை, வைக்கோல், குடிசை, கூடு, தூண், தாழ்ப்பாள், கதவு, அரண், கோடாரி, கயிறு, பொம்மலாட்ட மரப்பாவை, மண் பொம்மை, மண்கலம், செப்புக்கலம், கைவிளக்கு, தூங்கா விளக்கு, பட்டடை, பாரம், உடை, அன்னத்தூவி, மயிலிறகு, முகபடாம், பொன், அணிகலன், முத்து, பவளம், கண், மயிர், நெஞ்சம், உணவு, கொழுப்பு, நெய், தேன் கலந்த பால், கள், உப்பு, நோய், புண், மருந்து, நஞ்சு, மாசு, அமுது, கனி, காய், பிறப்பு, இறப்பு, உறக்கம், மறைமொழி, எழுத்து, நூல், செல்வம் ஊதியம், முதல் என்று அப்பட்டியல் மிக நீண்டது.

இவ்வாறு வள்ளுவர் எடுத்துக்காட்டும் பொருள்கள் எல்லாம் மக்களின் வாழ்வில் இடம் பெறுபவை, மக்களாலும் நன்கு அறியப்பட்டவை. எளிமை, தெளிவு, சுருக்கம், ஆழமுடைமை,என்னும் பண்புகள் கொண்டவனாய் உணர்த்தும் பொருளுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள் முந்நூற்றைம்பதுக்கும் மேலானவை திருக்குறளில் இடம் பெறுவதாக 'திருக்குறள் அமைப்பும் முறையும், 1972) நூலில் மு. சண்முகம் பிள்ளை கூறுகிறார்.

திருக்குறள் அந்தாதி

தேமொழி

52

ஒரு பாடலில் முடிவை முதலாகப் பெற்று அமைவது அந்தாதி [அந்தம்(முடிவு)+ஆதி(தொடக்கம்)] ஆகும். அந்தாதி வகை இலக்கியங்களின் இலக்கணம்; ஒரு பாடல் முடிவில் உள்ள எழுத்து, அசை, சீர், அல்லது அடி அடுத்து வரும் பாடலின் தொடக்கமாக அமையுமாறு பாடல்களைப் புனைவதைக் குறிக்கும். இவ்வகைப் பாடல்கள் அகரவரிசையில் உள்ள ஆத்திசூடி பாடல்களைப் போல கற்பவருக்கு உதவும் வகையில் எளிதில் நினைவில் தங்கும் பண்பு கொண்டவை.

சங்க நூலான பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து தொகுப்பில் உள்ள பத்து பாடல்களில் அந்தாதி அமைப்பைக் காணமுடிகிறது. முழுவதும் அந்தாதி அமைப்பில் அமைந்த முதல் நூலாகக் கிடைப்பது காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி ஆகும். ஆத்திசூடி பாடல் முறைக்கு எவ்வாறு ஔவை தொடக்கமோ அவ்வாறு அந்தாதி இலக்கியத்திற்கும் மற்றொரு அம்மையே தொடக்கம். பின்னர் புகழ்பெற்ற பல அந்தாதி நூல்கள் தோன்றின.

குறளுக்குக் கிடைத்த பழைய உரைநூல்களை ஒப்பிட்டு ஆராய்ந்தோர் வள்ளுவத்தில் அதிகார வரிசைமுறை, குறள் வரிசைமுறை, அதிகாரப் பெயர்கள் ஆகிய அமைப்புமுறை ஒவ்வொரு உரையாசிரியருக்கும் வேறுபடுகிறது என்பதனால் இன்று நாம் அறியும் திருக்குறள் அமைப்பு முறை திருவள்ளுவர் வடிவமைத்ததல்ல என்று கருதுகின்றனர். உரையாசிரியர்கள் பலரும் அதிகாரங்களை இயல் மாற்றி வகைப்படுத்தியும் அதிகாரத்திற்குள் வரும் குறட்பாக்களை இடம் மாற்றியும் அமைத்து உரை வகுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று நம் வழக்கத்தில் உள்ள திருக்குறளின் அதிகாரங்கள், அவற்றில் குறள் வரிசை வைப்பு முறை பரிமேலழகர் அமைத்தது. இவ்வாறான பரிமேலழகர் வைப்புமுறையில் வள்ளுவர் யாத்த குறள்களுள் ஒரு சிலவும் அந்தாதி முறையில் தானே அமைந்துள்ளன.

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன்று அமையாது ஒழுக்கு (20)

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து

வேண்டும் பனுவல் துணிவு (21)

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித் தாயினும் இல் (52)

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை (53)

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்

பேர்த்துள்ள வேண்டா பிறப்பு (357)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்

செம்பொருள் காண்பது அறிவு (358)

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்

கண்ணோட்டம் இல்லாத கண் (574)

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்

புண்ணென்று உணரப் படும் (575)

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை

ஐயப்பாடு இல்லதே ஒற்று (587)

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்

ஒற்றினால் ஒற்றிக் கொளல் (588)

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

திருக்குறள் அந்தாதி

தேமொழி

52

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (706)
முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும் (707)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (788)
நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை (789)

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு (801)
நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன் (802)

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (1022)
குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (1023)

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல் (696)
வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல் (697)

இவை குறள் வரிசை வைப்பு முறையில் அமைந்தவை. இருப்பினும் நாமும் கூட அந்தாதி முறையில் குறள்களை இரண்டிரண்டு குறள்களாகவோ அல்லது கீழுள்ளது போல ஒரு நீண்ட அந்தாதித் தொடராகவோ அமைக்கலாம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)
உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு (425)

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் (430)
இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் (1040)

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு (784)
பொருட்பொருளார் புன்னலந் தோயார்
அருட்பொருள்
ஆயும் அறிவி னவர் (914)

இதுபோன்றே; ஆர்.கே. அரங்கசாமி அவர்களால் அந்தாதியாகத் தொகுக்கப்பட்ட "திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் அந்தாதி : மூலமும் உரையும் (1946)" நூலில் 151 குறட்பாக்கள் அந்தாதி முறையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு குறள்தேனீ வினாடி வினா போட்டிகள் போல, காலிறுதி அரையிறுதி ஆண்டு நீண்ட விடுமுறை நாட்களில் அவர்களால் இயன்றவரை ஒரு நீண்ட திருக்குறள் அந்தாதி உருவாக்குவதை வீட்டுப்பாடமாகக் கொடுத்தால் விளையாட்டு போல அவர்கள் குறள் கற்கும் வாய்ப்பு உண்டு.

குறளுக்கு உரிமை கோரல்

தேமொழி

53

திருக்குறளின் சிறப்பு, நூலின் ஆசிரியர் யார் என்பதையும், அவர் பற்றிய குறிப்பாக அவருடைய காலம், இடம், சமயம், இனம் என எதுகுறித்தும் எக்குறிப்பையும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடாமல் இருப்பது. வள்ளுவர் என்பவர் தமிழ் அறிந்தவர் என்பதையும் அவர் மக்கள் தம் வாழ்வில் நன்னெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று விரும்பி அவற்றைக் குறள் வெண்பாக்களாக எழுதிவிட்டுச் சென்றார் என்பதை மட்டுமே நாம் உறுதியாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அவர் நூலின் வழியே கிடைக்கும் குறிப்புகள் மூலம் ஏதேனும் அவர் குறித்துத் தெரிந்து கொள்ள இயலுமா என ஆராய்வது ஆய்வாளர்களின் ஆர்வம். ஆனால் அது போன்ற தேடல்களைத் தடை செய்ய இயலாது. வள்ளுவரைத் தங்கள் இனம் என்றும், தங்கள் சமயம் என்றும் என்றும் அடையாளம் காணும் முயற்சிகள் தமிழ் ஆய்வுலகின் தொடர்கதை.

வள்ளுவர் ஒரு தமிழறிந்த ஆண் புலவர் என்பதையும், அறம் மிக்க வாழ்வை அவர் வலியுறுத்தினார் என்பதையுமே நாம் அவர் குறித்து உறுதியாகக் கூறக் கூடிய கருத்துகள்.

மழை மீதும், உழவு மீதும் பெருமதிப்பு கொண்டிருந்தார்;

முன்னோர் வணக்கத்தை ஏற்றுக் கொண்டார்;

ஊழ் என்பதன் மீது நம்பிக்கை கொண்டிருந்தார்;

இல்லறத்தைப் போற்றினார் துறவறத்தையும் மதித்தார்;

ஈகைக் குணத்தைப் போற்றினார், பிச்சை எடுப்பதை வெறுத்தார்;

கொல்லாமை, ஊனுண்ணாமை ஆகிய பண்புகளைப் போற்றினார்;

வாழ்வில் கல்வி, அன்பு, நட்பு, இல்வாழ்க்கை, ஒழுக்கம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார்;

பொய், களவு, கள், கொலை, காமம் (முறையற்ற உறவு/ கணிகையர் உறவு) ஆகிய ஐந்தையும் தீய ஒழுக்கங்கள் என்றார்;

சினம் கொள்ளுதல், கடுஞ்சொல் கூறல், கேடு செய்தல், பற்று கொண்டிருத்தல், சூதாடுதல் ஆகியனவற்றைக் கண்டித்தார்;

முற்பிறவி, மறுபிறவி, ஏழ்பிறப்பு, சொர்க்கம், நரகம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார் என்பதை அவர் கொள்கை நோக்குகளாக அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றின் மூலம் தெளிவாக அறிய முடியும்.

வள்ளுவர் தன் சமயத்தவர் என உரிமை கொண்டாட விரும்புபவர்களுக்கு ஆணித்தரமான குறிப்பு எதையும் அவர் விட்டுச் செல்லாததுடன், அவர் எவற்றையும் பொதுச் சொல்லால் சொல்லிச் செல்வதே பலர் அவருடைய பாடல் குறிப்புகள் மூலம் தங்கள் பிரிவில் அவரை அடக்கும் முயற்சிக்கு வழிகோலிட்டு விட்டது என்பதை மறுப்பதற்கு இல்லை. முதல் குறள் குறிப்பிடும் "ஆதிபகவன்" யார் என்பதிலேயே கேள்விகள் தொடங்கிவிடுகின்றன. இந்திய நிலப்பரப்பில் தோன்றாத ஆபிரகாமிய சமயங்களும் கூட வள்ளுவரை உரிமை கொண்டாடும் அளவிற்கு வள்ளுவர்பால் ஆர்வம் கரை புரண்டு ஓடுவது இன்றைய நிலை. இவ்வாறிருக்க, இந்திய மண்ணின் வைதீக சிரமண சமயங்கள் வள்ளுவர் கருத்துக்களின் அடிப்படையில் அவரை உரிமை கொண்டாடுவதில் வியப்பேதும் இல்லை. குறள் சொல்லும் கருத்துக்களைச் சீர் தூக்கிப் பார்த்தால் அவர் யார் என்ற குறிப்பு கிடைக்கக் கூடும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

குறளுக்கு உரிமை கோரல்

தேமொழி

53

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

வைதீக சிரமண சமயங்களும் தமிழ் மண்ணுக்குப் புறச் சமயங்களே என்பதைத் தமிழர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. வள்ளுவர் ஏதோ ஒரு சமயத்தில் பிறந்திருக்கலாம், வளர்ந்திருக்கலாம் அதன் தாக்கமும் அவருக்கு இருந்திருக்கலாம். மெய்ப்பொருள் காண விழைந்த அவர் பின்னர் வேறு ஏதோ ஒரு சமயத்தையும் பின்பற்றியும் இருக்கலாம், அல்லது எந்தச் சமயமுமே எனக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்திருக்கலாம். உலகைப் படைத்தவர் என்று எவரும் இல்லை (1. atheistic) என்றோ, அல்லது படைத்தவர் யார்? அப்படி என ஒருவர் உண்டா இல்லையா என்ற அக்கறை எனக்கில்லை (2. agnostic) என்ற பிரிவுகளின் கீழும் வள்ளுவர் நகர்ந்து இருக்கலாம். இந்திய மண்ணின் சமணம் பௌத்தம் எனப்படும் சிரமண சமயங்களை மெய்யியலாளர் முறையை முதல் இரண்டு பிரிவுகளில் வகைப்படுத்துவதைக் காண இயலுகிறது. ஆக, இறுதியில் வள்ளுவரின் கொள்கைகள் மூலம் அவர் வாழ்வின் நிலைப்பாட்டைக் கண்டுணர இயலுமா என்பதே நம் முன் நிற்கும் கேள்வி.

தனி வாழ்வில் அன்புடைமை, அருளுடைமை, அற வாழ்வு, பிறர்க்குத் தீங்கிழைக்காத வாழ்க்கை, நன்னெறி பின்பற்றல் ஆகிய அறப்பொருள் கருத்துக்களைக் கொண்டோ; அல்லது பொது வாழ்வில் மன்னனின் கடமை, மக்களுக்கு முறை செய்தல், பொருளாதாரக் கொள்கை, வரிவிதித்தல் போன்ற புறப்பொருள் கருத்துக்களைக் கொண்டோ வள்ளுவரை ஒரு சமயத்திற்குள் அடையாளப் படுத்தலாம் என்ற முயற்சி தெளிவான ஒரு முடிவைத் தராது. ஏன் எனில், மக்களை நோக்கிய நற்பண்புகளும், வாழ்க்கை நடைமுறைகளும் உலகின் அனைத்து மண்ணிலும் வழக்கமாகவே இருக்கும், அவை பொதுவான கருத்துகள்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (72)

என்பது உலகம் தழுவிய கோட்பாடு, அனைத்துச் சமயங்களும் தோன்றுகையில் இதை அடிப்படையாகக் கொண்டே தொடங்கப்பட்டிருக்கும். சமயம் நிறுவனமயமாக்கப் பட்ட பிறகு அதன் கொள்கைகள் மாறிவிடுவதையும் கணக்கில் கொள்ளவேண்டும்.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (619)

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். (1062)

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (222)

என்ற இவை போன்று கடவுளைப் பொருட்படுத்தாமை, கடவுளையே கண்டிக்கும் முறை, மேலுலகத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் கருத்துகள் உலகின் பல சமய நம்பிக்கைகளுக்கு அடிப்படை அல்ல. இது ஒருபுறமிருக்க, உலகின் 'அனைத்து' உயிர்களிடமும் அன்பு செலுத்துக, 'புலால் உண்ணுவதைத் தவிருங்கள்' என்று கூறும் சமயங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதைத்தான் வள்ளுவரின் சமயம் எது என்ற தேடலுக்கு முனைவோர் கருத்தில் கொள்ள வேண்டும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (972), பரந்து கெடுக உலகியற்றியான் (1062) என்ற கூற்றுகளும்; புலால் மறுத்தல் (251–260) கருத்துகள் யாவும் வள்ளுவர் யார் என்று அறியும் நோக்கில் முன்னேற வேண்டிய திசை காட்டும் கைகாட்டிகள்.

குறளுக்கு உரிமை கோரல் ....

தேமொழி

54

கர்மவினை, மறுபிறவி, முக்தி, தர்மம் இவை யாவும் இந்திய மண்ணின் சமயங்களில் பொதுவாக உள்ளன. இவற்றுக்குப் பொருள் விளக்கம் தருவதில்தான் அவற்றிற்கு இடையே சிற்சில மாறுபாடுகள் உள்ளன. அது போன்றே, சொர்க்கம் நரகம் போன்றவையும் இச்சமயங்களில் உண்டு. இருப்பினும், இவற்றுக்கான விளக்கங்களும் வேறுபடும். இந்திரன் லட்சுமி போன்ற கடவுளரும் இச்சமயங்களில் உண்டு. ஆனால், அவர்களை அச்சமயத்தார் அணுகும் நோக்கமும் வேறுபடும். இந்தியச் சமயங்கள் யாவும் மக்களிடம் புழக்கத்தில் இருந்த பல்வேறு நம்பிக்கைகளை, சடங்குகளை, வழிபாட்டு முறைகளை உள்வாங்கிக் கொண்டு தங்களைத் தகவமைத்துக் கொண்டவை என்பது சமய ஆய்வாளர்கள் கூறும் கருத்து. காலப்போக்கில் அச்சமயங்களின் பரிமாணங்களிலும் மாற்றம் ஏற்பட்டு; மக்களின் தேவையை, விருப்பத்தை உள்வாங்கித் தங்களுடையதாக்கிக் கொண்டு வளர்ந்தவை.

சொல்லப் போனால், அடிப்படையில் உலகைப் படைத்தவர் பற்றிய கருத்து, கொல்லாமை, புலால் மறுத்தல் கொள்கைகள் மட்டுமே இந்தியச் சமயங்களின் தனித்தன்மையை ஒவ்வொன்றிலும் வேறுபடுத்திக் காட்டும். இவை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளே ஆய்வாளர்களுக்கு அவர் யார் எனக் காட்டவும் கூடும். வள்ளுவர் காலத்தில் கடவுளைப் பற்றிய கருத்திலும் புலால்மறுத்தலிலும் தீவிரமாக இருந்தவை சிரமண சமயங்களான சமணமும் பௌத்தமும் என்பது வரலாறு. கொல்லாமை கருத்தில் பௌத்த சமயம், வைதீகம்–சமணம் சமயக் கொள்கைகளுக்கு இடைப்பட்ட வழியில் பயணித்தது.

தொல்லியல் ஆய்வாளர் இரா.நாகசாமி "THIRUKKURAL–An Abridgment of Sastras" (2017) என்ற நூலை வெளியிடுவதற்கு முன்னரே; ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடிய "திருக்குறள் நூற்றெட்டு" என்ற நூலை 1950இல் (சங்கத மேற்கோள்களுடன்) ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம் வெளியிட்டுள்ளது; நூலின் உரையாசிரியர் பெயர் கொடுக்கப்படவில்லை, இது மடத்தின் வெளியீடு. சுருக்கமாக; திருக்குறள் வேதங்களின் சாரம் என்பதுதான் அந்த நூலின் நிலைப்பாடும். ஏன் 108 திருக்குறள்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது? இந்திய ஆன்மீகத்தில் 108 என்ற எண்ணிற்குத் தனிச்சிறப்பு உண்டு, வைதீகச் சமயத்திற்கு மட்டுமல்ல சமண புத்த சமயங்களுக்கும் 108 என்ற எண் முக்கியமானதே. ஒவ்வொரு சமயமும் 108 என்பதற்கு ஒவ்வொரு காரணத்தை அடிப்படையாகக் கூறும். இந்நூலில் பெரும்பாலும் சனாதன கருத்து சாயல் கொண்ட குறள்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு வைதீகச் சமய தொடர்பு காட்டப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. ஆனால், இப்பொழுது "புலால் மறுத்தல்" என்பதற்கு இந்நூல் தரும் விளக்கத்தை மட்டும் காணலாம்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (259)

[அறத்துப்பால், துறவறவியல், புலால் மறுத்தல்]

நெய் முதலிய பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலை விட ஒன்றன் உயிரைக்கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது (மு. வரதராசன் உரை).

சனாதனத்தின் அடிப்படை செயலான வேள்வி குறித்த இக்குறளை வைதீகத்துடன் இணைக்கும் முயற்சியை மேற்கொள்ளும் பொழுது, கொடுக்கப்படும் விளக்கமே களத்தில் எதிரணிக்குச் சார்பாக விளையாடும் ஆட்டக்காரரின் செயல்பாடு போல அமைகிறது. குறிப்பாகப் பௌத்தச் சமயத்திற்குச் சார்பாக அமைகிறது இந்நூல் தரும் விளக்கம். அந்த விளக்கத்தை அவ்வாறே இங்குக் கொடுப்பது தெளிவுதரும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

குறளுக்கு உரிமை கோரல் . . . . .

தேமொழி

54

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

"தமிழ்நாட்டில் பண்டை சங்கநூல்களில் புலால் உண்ணுவது ஆக்ஷேபிக்கப்படாதது மாத்திரமேயன்றி அது போற்றப்பட்டு மிருக்கிறது. பழைய தமிழ்மக்கள் புலாலருந்துவதைச் சிறப்பாகத்தான் கொண்டிருந்தார்கள். வேதங்களிலும் யாகம் முதலியவைகளில் மாம்சம் உபயோகப்படுத்தப்பட்ட தென்பது தெளிவாகத் தெரிகிறது. ஆதலால் திருவள்ளுவர் வைதிகக் கொள்கையினராயிருந்தாலும் முதன் முதலாக புலால் மறுத்தலைப் பிரசாரம் செய்ததற்குக் காரணம் என்னவெனின், அவர்காலத்தில் வடநாட்டிலிருந்து புத்த சமண மதப்ரசாரங்கள் தென்னாட்டில் ஆரம்பிக்கப்பட்டன. அப்போதிருந்த வைதிகமகான்கள் பௌத்தர்களுடைய அஹிம்ஸைக் கொள்கையைத் தங்களுடைய மதத்தில் சேர்த்துக்கொண்டார்கள்.அதனால்தான் இக்காலத்து பிராமணர்கள் புலால் தவிர்த்திருக்கிறார்கள் போலும்.

ஆனால் இவ்விதம் அபிப்பிராயப்படுவது சரியாகத்தோன்றவில்லை. இங்கு அஹிம்ஸாதர்மத்தை உபதேசித்திருப்பது பௌத்தசமயக் கொள்கைகளை அனுசரித்து அன்று, வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் உபதேசிக்கப்பட்டிருக்கிற அஹிம்ஸாதர்மத்தை யனுசரித்தே ஆகும். அதெப்படியென்றால், வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் ஒருவன் கிரகஸ்தாச்ரமத்தை விட்டு ஸன்யாஸாச்ரமத்தை யடையும் போது உலகிவுள்ள எல்லாப்ராணிகளுக்கும் அபயப்ரதான ப்ரதிக்ஞை செய்து அஹிம்ஸா விரதத்தைக் கைகொள்ளும்படி உபதேசிக்கின்றன. பௌத்தமதமோ அம்மதத்தில் சேர்ந்தோர் எல்லாருக்குமே கொல்லாமையை உபதேசிக்கிறது. ஆனால் அந்த உபதேசம் அனுஷ்டானத்தில் விபரீதமாகவே முடிந்திருக்கிறது.... .... ஆதி புத்த பகவான்* மரணமடைந்ததே ஒரு சிஷ்யனுடைய வீட்டில் அவனால் பரிமாறப்பட்ட பன்றி மாம்சத்தை அதிகமாகத் தின்றுவிட்டதால் ஏற்பட்ட அதிசாரம் காரணமாகத் தான் என்று புத்தருடைய சரித்திரங்கள் கூறுகின்றன. (Vide Sacred Books of the East Vol XI page 71–73) பிறர் கொன்றதைத் தாம் சாப்பிட்டால் தவறில்லை என்ற கொள்கையை நம் நாயனார் கீழ்வரும் குறளில் பரிஹசித்திருக்கிறார் :–

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்

விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில். (256)

(என்ற குறளுக்குப் பொருள் விளக்கம் அளித்துவிட்டு; தொடர்ந்து.....)

நமது வேதசாஸ்திரங்களோ பொதுவாக எல்லாமக்களுக்கும் பூர்ண அஹிம்ஸாதர்மத்தை உபதேசிக்கவில்லை. நாலாவது ஆச்ரமமாகிய ஸன்யாஸாச்ரமத்திற்கு மாத்திரம் உயிருள்ள ஒரு செடியினுள்ள இலையைக்கூடக் கிள்ளக்கூடாது என பூர்ண அஹிம்ஸாதர்மம் உபதேசிக்கிறது. வர்ணாச்ரமங்களின் படிகளையனுசரித்து அஹிம்ஸா தர்மமும் படிப்படியாக கடுமையாக்கப் பட்டிருக்கிறது.... ["திருக்குறள் நூற்றெட்டு" 1950, பக்கம் 56–57] என்று தொடர்கிறார் உரைகாரர்.

(*முதல் குறள் விளக்கத்தில் 'ஆதிபகவன்' என்பதை கீதையின் கண்ணனுடன் தொடர்புப்படுத்தியவரே இங்குப் புத்தருக்கு அச்சொல்லைப் பயன்படுத்துகிறார் !!!!!)

உண்மையில் இது ஒரு மிக நல்ல வாதம், உரிமை கோரல் வழக்கைத் தெளிவாக்கிவிட்டது. வைதீகர்கள் வேள்வியில் உயிரினங்களைப் பலியிட்டனர் என்பது வேதத்தில் பதிவாகி உள்ளது என்றால்; 'கொன்றால் பாவம் தின்றால் போச்சு' என்ற வகையில் உணவுக்கொள்கை வைத்திருக்கும் பௌத்தர்களை வள்ளுவர் கண்டிக்கிறார் என்றால்; இந்த வாதத்தின் முடிவாகக் கொல்லாமை, புலால் மறுத்தலை அறிவுறுத்தும் திருக்குறளை சமணக் கொள்கைகளின் தாக்கம் கொண்ட நூல் என்றுதான் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

வள்ளுவம் உறுதிப்பட உணர்த்தும் கருத்துகள்

தேமொழி

55

பொதுவாக "உறுதிப்பொருள்கள்" நான்கு என்று கூறப்படும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன ஆகும். ஆனால், திருவள்ளுவர் எவற்றை எல்லாம் மிக "உறுதியான கருத்துக்களாகக்" கூறுகின்றார் என்று அறிய முயல்வது ஆர்வமூட்டும் ஒரு தேடலாக அமையும் என்பதில் ஐயமில்லை. எதையும் உறுதிப்படக் கூறுவதற்கு இலக்கியத்தில் "தேற்ற ஏகாரம்" பயன் கொள்ளப்படும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்ற முதல் குறளிலேயே அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை என்பதை "முதற்றே" என்ற தேற்ற ஏகாரத்தில் முடியும் சொல்லாக அமைத்து உறுதிப்படக் கூறுகிறார். தேற்றப் படுத்தும் ஏகாரம் அல்லது உறுதிப்படுத்தும் ஏகாரம் கொண்டு 'முதற்றே' என்ற சொல் அமைகிறது.

இந்த "ஏகார இடைச்சொல்" தேற்றம் தவிர்த்து; வினா, பிரிநிலை, எண், ஈற்றசை எனும் பொருள்களை உணர்த்தியும் அமையும்.

"தேற்றம், வினாவே, பிரிநிலை, எண்ணே,
ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே"

என்பது தொல்காப்பிய இடையியல் நூற்பா.

'ஏ' இடைச் சொல்லுக்குத் தொல்காப்பியர் கூறியுள்ளவற்றோடு 'இசைநிறை' என்ற ஒன்றையும் கூட்டி 'ஏ' ஆறு பொருளில் வரும் என்று நன்னூலார் இடையியலில் கூறியுள்ளார்.

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகாரம்மே"

ஆக, ஏகார இடைச்சொல் அசைநிலையாகவும் இசைநிறைக்கவும் கூட செய்யுள்களில் இடம் பெறுவதுண்டு. இது ஏகார இடைச்சொல் என்பதன் இலக்கணப் பின்னணி.

குறளில் ஏகார இடைச்சொல் சற்றொப்ப 90 குறள்களில் இடம் பெறுகின்றன, அவற்றுள் சில;

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (1031)

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது; இதில் 'உழவே தலை' தேற்றமாகக் கூறப்படுகிறது. தேற்றம் என்றால் தெளிவு, உறுதி என்று பொருள். என்று இதில் ஏ தேற்றப் படுத்துகின்றது. ஆகவே இது தேற்றம்.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. (39)

அற வாழ்வில் வருவதே இன்பம்; பிற வழிகளில் வருவன அல்ல, அவை புகழ் தராது; இதில் ஏ என்பது பலவழிகளை ஒப்பிட்டு அறவழியைப் பிரித்துச் சுட்டுகிறது. பிரிநிலை என்றால் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துக் காட்டுவது. ஆகவே இது பிரிநிலை.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

வள்ளுவம் உறுதிப்பட உணர்த்தும் கருத்துகள்

55

தேமொழி

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. (766)

வீரம், மானம், நன்னடத்தை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய இந்த நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்; இதில் வீரம், மானம், நன்னடத்தை, நம்பிக்கைக்கு உரியவராக இருத்தல் என எண்ணிச் சொல்கிறது. ஆகவே இது எண்ணுப் பொருள்.

குறளில் ஏகார இடைச்சொல் பயன்கொண்டு தேற்றமாகவும் பிரித்து ஒப்பிட்டுக் காட்டும்வகையில் உறுதியாக உணர்த்தப்படும் கருத்துகள் சிலவற்றைப் பின் வரும் குறள்களில் காணலாம்.

தேற்றம்:

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப் பதில்லாயின் நன்று. (49)
உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் (282)
தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும் (293)
உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (394)
பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (505)
காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள (527)

பிரிநிலை:

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ். (64)
அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (76)
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று (108)
தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு (129)
வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து (221)
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு (299)

'நமது கல்வி முறை'

தேமொழி

56

"நியாயமான தேர்வு முறை என்பதற்காக எல்லோரும் ஒரே தேர்வை எழுத வேண்டும்: அனைவரும் தயவுசெய்து அந்த மரத்தில் ஏறுங்கள்" என்று கூறும் இந்தக் கருத்துப்படத்தை நாம் நன்கு அறிவோம். இது நமது கல்வி முறையை, அதில் உள்ள குறைபாட்டை விமர்சிக்கும் ஒரு கருத்துப்படம். இப்படத்தில் உள்ள கருத்து அறிவியல் அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொன்னதாக அறியப்படும், "எல்லோரும் ஒரு மேதைதான். ஆனால், ஒரு மீனை அதன் மரத்தில் ஏறும் திறனை வைத்து நீங்கள் மதிப்பிட்டால், அது தனது வாழ்நாள் முழுவதும் தன்னை ஒரு முட்டாள் என்று நம்பியே வாழும்" என்ற கருத்தைத் தெளிவாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட கருத்துப்படம். உண்மையில் இந்தச் சொற்றொடர் தவறாக ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறியதாகப் பரவலாக அறியப்படும் ஒரு கூற்று. பல பத்தாண்டுகளாகவே கல்வித்துறை சார்ந்த அறிஞர்கள் பலர் சொல்லிவரும் கருத்துதான் இது என்று இப்பொழுது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் 'பொதுவான கல்வி' ஒன்றைக் கற்கக் கிடைக்கும் வாய்ப்பும், கற்கும் சூழ்நிலையும், அதில் அவர் காட்டும் திறமையும், பெறும் தகுதியும் வேறு வேறு என்பது மறுக்க இயலாத உண்மை. பல பின்புலத்திலிருந்து வருபவர்கள் மாணவர்கள். அவர்கள் பெறும் தேர்ச்சி மதிப்பெண்களை மட்டும் பயன்படுத்தி ஒரு வேலைக்கான அல்லது உயர்படிப்பிற்கான தகுதியை நிர்ணயித்தால், பல நூறாண்டுகளாக வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்கள் மீண்டும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாகவே பின்தங்கிவிடக் கூடிய நிலை தொடரும் என்பது மனிதநேயச் செயற்பாட்டாளர்கள் வைக்கும் வாதம். குறிப்பிடப்படும் இந்த நிலை இந்தியாவிற்கோ, தமிழ்நாட்டிற்கோ உரிய சூழல் மட்டும் அல்ல. அமெரிக்கக் கல்விப்புலத்திலும் இந்த வாதம் பல ஆண்டுகளாக உள்ளது என்பதைத்தான் அங்குப் பரவலாக விவாதத்தில் உள்ள இக்கருத்தை விளக்கும் இப்படம் காண்பிக்கிறது. கல்வித் துறையில் இந்த உருவகம் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. ஆர்வம் உள்ளவர்களுக்கு இணையத்தேடலில் மேலும் பல செய்திகள் இது குறித்துக் கிடைக்கும்.

தமிழ்நாட்டிலும் வகுப்புரிமை குறித்த கருத்து தொடங்கப்பட்டு ஒரு நூற்றாண்டிற்கு மேல் ஆகிவிட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டதும் வகுப்புரிமையை நிலை நாட்டவே என்பதுதான் இந்திய வரலாறு. தமிழகத்தில் தொடங்கிய போராட்டத்தால் ஒன்றிய அரசு அதைக் கவனத்தில் கொண்டு, ஒன்றிய அரசின் அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேருவும், சட்ட அமைச்சர் அண்ணல் அம்பேத்கரும் அறத்தை நிலை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுத்தார்கள்.



தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

'நமது கல்வி முறை'

தேமொழி

56

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டு வந்து, அரசமைப்பு விதி 15(4) உருவாக்கப்பட்டது. இந்தப் பிரிவின்படிதான், இன்றளவும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையினருக்கு நாடு முழுவதும், பணியில் கல்வியில் இட ஒதுக்கீடு ஒன்றிய மாநில அரசுகளால் அளிக்கப்படுகிறது. மருத்துவக் கல்வி போன்ற தொழிற் கல்வி நுழைவுத் தேர்வுகள், கல்லூரியில் மாணவர் சேர்ப்பு நடக்கும் காலங்களில் பொதுவான ஒரு தேர்வின் மதிப்பெண் அடிப்படையில் மாணவர் தேர்வு குறித்த சர்ச்சைகள் எழும்புவது காலங்காலமாகத் தொடரும் ஒரு வழக்கம்.

இந்தச் சர்ச்சைக்கான தீர்வை, அன்றே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே வள்ளுவர் ஒரு குறளில் உணர்த்தியுள்ளார் என்பது பரவலாகப் பேசப்பட்டதில்லை.

> தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
>
> பாற்பட்டு ஒழுகப் பெறின்
>
> [அறத்துப்பால், நடுவு நிலைமை, குறள் – 111]

இக்குறளை நாம் இக்காலத்திற்குப் பொருத்திப் பார்ப்பது இன்றியமையாதது. இக்குறளுக்குத் தமிழ் அறிஞர்கள் வழங்கிய உரைகள் பின்வருமாறு:

மணக்குடவர்: நடுவு நிலைமை என்று சொல்லப்படுகின்ற ஒன்று நல்லதே: அவரவர் நிலைமைப் பகுதியோடே அறத்தின்பாற்பட்டு ஒழுகப் பெறுமாயின்.

பரிமேலழகர் : தகுதி என ஒன்றே நன்று – நடுவு நிலைமை என்று சொல்லப்படும் ஓர் அறமுமே நன்று; பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின் – பகை, நொதுமல் நட்பு எனும் பகுதிதோறும், தன் முறைமையை விடாது ஒழுகப் பெறின்.

மு.வரதராசன்: அந்தந்தப் பகுதிதோறும் முறையோடு பொருந்தி ஒழுகப்பெற்றால், நடுவுநிலைமை என்று கூறப்படும் அறம் நன்மையாகும்.

வ.சுப.மாணிக்கம் : இடந்தோறும் முறையோடு ஒழுக முடியின் நடுவு நிலைமை மிகச் சிறந்த அறமாம்.

"அவரவர் நிலைமைப் பகுதியோடே அறத்தின்பாற்பட்டு ஒழுகப் பெறுமாயின்" என்று மணக்குடவர் தெளிவுபடுத்துவதன் அடிப்படையில் படித்தோம் என்றால் இக்குறளின் பொருளை; பகுதியால் பாற்பட்டு நடந்து கொள்வார் எனின் நடுவு நிலைமை என்று சொல்லப்படும் ஒன்று நல்லதே என்பதை இப்பாடலின் பொருளாகக் கொள்ள முடிகிறது. 'பகுதியால் பாற்பட்டு' என்பது பல வேறு பின்புலம் கொண்ட மக்களைக் குறிப்பதாகப் புரிந்து கொள்ளலாம். பகுதியான் என்பது பகுதிதோறும் எனப் பொருள்படும் என விளக்குவார் பரிமேலழகர். மக்கட்பகுதி, அவரவர் நிலைமைப் பகுதி, அறப்பகுதி எனவும் உரைகாரர்கள் இதற்குப் பொருள் கூறுவர்.

ஆக, பலபிரிவு மக்களின் தேவை உணர்ந்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் நலன் விளையும் வகையில் நீதி வழங்கப்படும் முறையை 'எந்தப் பகுதியினரிடத்தும் நேர்மையாக நடந்து கொள்ளும் அறம் சார்ந்த நடுவு நிலைமை' என்கிறார் வள்ளுவர். 'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்று கூறிய வள்ளுவர் அறம் எது என்பதில் கொண்ட நிலைப்பாட்டை இக்குறளும் விளக்குகிறது.

' எண்ணென்ப சொல்லென்ப '

தேமொழி

57

திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்று முப்பால் உள்ளது, ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 10 குறள்கள் என்ற எண்ணிக்கையில் 133 அதிகாரங்களில் மொத்தம் 1330 குறள்கள் உள்ளன. ஒரு குறளில் முதல் அடியில் 4 சீர்கள், இரண்டாம் அடியில் 3 சீர்கள் என 7 சீர்கள் கொண்டது ஒரு குறள் என்ற அடிப்படைத் தகவலைப் பள்ளிச்சிறார் முதற்கொண்டு அனைவரும் அறிவோம். மேலும் அறத்துப்பாலில் 4 இயல்களும், பொருட்பாலில் 3 இயல்களும், இன்பத்துப்பாலில் 2 இயல்களும் என திருக்குறளில் மொத்தம் ஒன்பது இயல்கள் உள்ளன. அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள் (380 குறள்கள்), பொருட்பாலில் 70 அதிகாரங்கள் (700 குறள்கள்), இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்கள்(250 குறள்கள்) என்ற கணக்கும் படித்திருப்போம். குறளுக்கு 2 அடி என்பதால் 1330 குறளுக்கும் கணக்கிட்டால் குறளில் 2660 அடிகள் என்றும், ஒரு குறளுக்கு 7 சீர் என்பதால் 1330 குறளுக்கும் கணக்கிட்டால் திருக்குறளில் 9,310 சொற்கள் இருக்கலாம் என அடுத்த கட்டமாக ஒரு தோராயமாக மதிப்பிடுவோம். ஆனால், இதற்கும் அடுத்த கட்டமாக, திருக்குறளுக்குத் தொடரடைவு செய்த முனைவர் ப. பாண்டியராஜா, "திருக்குறள் – சொற்கள் – எண்ணிக்கை" என்று தனது ஆய்வுத் தளத்தை விரிவாக்கி ஆராய்ந்து இருக்கிறார் என்பதை அவருடைய தமிழ் தமிழ் இலக்கியத் தொடரடைவு தளத்தில் (http://tamilconcordance.in/TABLE-kuraL.html) உள்ள ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அறியலாம். இனி திருக்குறள் குறித்து அவர் தளம் தரும் புள்ளி விவரங்களில் ஒரு பார்வை: முனைவர் ப. பாண்டியராஜா திருக்குறளில் 11368 சொற்கள் உள்ளன என்றும்; அவற்றில் மீண்டும் மீண்டும் வராத சொற்களாக 4902 சொற்கள் உள்ளன எனவும் குறிப்பிடுகிறார். சொற்களைப் பிரித்துக் கணக்கிட்ட முறையை 'பிரிசொற்கள்' என்பதற்கு எடுத்துக்காட்டாக வாலறிவன் என்பதை வால்_அறிவன் என அவர் கையாண்ட முறையை விளக்குகிறார். இதனால் சொற்களின் எண்ணிக்கை 11368 என்ற அளவை எட்டியுள்ளது.

அடுத்து, கூட்டுத் தொடரடைவு என்ற முறையில் சங்க இலக்கியப் பாடல்களில் (பத்துப்பாட்டு+எட்டுத்தொகை) உள்ள சொற்களையும், திருக்குறளில் காணப்படும் சொற்களையும், "சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவற்றில் உள்ள பொதுச் சொற்கள், பொதுவல்லாத சொற்கள்" என்று ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுகிறார்.

1. சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றில் உள்ள பொதுச்சொற்கள்:

இப்பிரிவில் சங்க இலக்கியத்திலும், திருக்குறளிலும் ஒரே மாதிரியான எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பொதுவான சொற்களாக வகைப்படுத்துகிறார். அதாவது, 'பகவன் முதற்றே உலகு' என்பதில் இடம் பெறுவது போன்றே, 'உலகு காக்கும் உயர் கொள்கை (புறம்–400) என்ற புறப்பாடலிலும் "உலகு" என்ற சொல் இருப்பது பொதுச்சொல் ஆகும். அஃது, அஃதே என்பன வெவ்வேறான சொற்கள் ஆகும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

' எண்ணென்ப சொல்லென்ப '

தேமொழி

57

முன்பக்கத் தொடர்ச்சி . . . .

திருக்குறளில் உள்ள 'அஞ்சுக' என்ற சொல் சங்க இலக்கியத்தில் இல்லை. ஆனால் அஞ்சி, அஞ்சுதும், அஞ்சுவர் போன்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் உண்டு. எனவே, (சங்க இலக்கியத்தில் இல்லாமல்) திருக்குறளில் மட்டும் காணப்படும் சொற்கள் என்ற பிரிவில் குறளில் உள்ள சொற்களை ஒட்டிய சொற்கள் சங்க இலக்கியத்தில் உள்ளனவா என்று தீவிரமாகக் கவனிக்கவேண்டும் என்கிறார். திருக்குறளில் இடம்பெறும் அடிமை, பகவன் ஆகிய சொற்களும் அந்தச் சொற்களை ஒட்டிய சொற்களும் சங்க இலக்கியத்தில் இல்லை என்று எடுத்துக்காட்டி விளக்குகிறார். சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றில் உள்ள பொதுச் சொற்கள் என 2600 சொற்களை இவர் பட்டியலிடுகிறார்.

2. சங்க இலக்கியத்தில் இல்லாமல், திருக்குறளில் மட்டும் காணப்படும் சொற்கள்:

சங்க இலக்கியத்தில் இடம் பெறாமல் திருக்குறளில் மட்டுமே இடம் பெறும் சொற்கள் மட்டுமே இரண்டாயிரத்திற்கும் மேல் என்றாலும், திருக்குறளில் உள்ள 'அஞ்சுக' என்ற சொல் சங்க இலக்கியத்தில் இல்லை என்றாலும் அஞ்சி, அஞ்சுதும், அஞ்சுவர் போன்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன எனக் குறிப்பிட்டதை நினைவில் கொள்க. இப்பிரிவில் 2180 சொற்களை இவர் பட்டியலிடுகிறார்.

மொழியின் வளர்ச்சியில் புதுச்சொற்கள் மொழியில் பயன்பாட்டிற்கு வருவதும் சில வழக்கொழிவதும் இயல்பே. எனவே திருக்குறளில் மட்டுமே வரும் சொற்கள் எவை என்று பார்வையிடுகையில் ஓர் எழுபது சொற்கள் தேர்வு செய்யப்படு இங்கே கொடுக்கப்படுகிறது. இந்தச் சொல் தேர்வுக்குச் சிறப்பு அடிப்படை என எதுவும் இல்லை என்பதைப் படிப்பவர் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். சொற்களைப் படித்துக் கொண்டே வருகையில், அப்படியா! இது சங்க இலக்கியத்தில் இல்லையா என்று வியந்த சொற்கள் இப்பட்டியலில் இடம் பெறுகின்றன.

இப்பட்டியலை வியந்து வியந்து இருமுறை படிக்கப் பரிந்துரை வழங்கப்படுகிறது. இப்பட்டியல் இருவேறு கோணங்களைக் காட்டும். முதலில் சங்க இலக்கியத்தில் இல்லாத திருக்குறள் சொற்களா? என்ற வியப்புடன் படிப்பது. அடுத்து மீண்டும், இன்றும் நம் வழக்கில் இந்தத் திருக்குறள் சொற்கள் உள்ளனவா என்று மற்றொருமுறை படித்து வியப்பது.

சொல் எழுபது:

சங்க இலக்கியத்தில் இல்லாமல், திருக்குறளில் மட்டும் காணப்படும் 2180 சொற்களில் 70 சொற்கள்:

அகர, அடிமை, அமைச்சு, அறிவது, ஆசாரம், ஆட்சி, இகழ்ச்சி, இதனால், இருட்டு, இல்வாழ்க்கை,

இழுக்கு, உலகத்தார், ஊருணி, எண்ணம், எனது, எனப்படும், ஒருகால், கடப்பாடு, கடைப்பிடித்து, கயவர்,

கல்வி, கள்ளம், கற்க, குலம், சார்பு, சிலர், செங்கோன்மை, செயற்கை, தலைமக்கள், தள்ளாமை,

தானம், துப்புரவு, தும்மல், தூக்கம், தூய்மை, தொழும், தோல்வி, நாகரிகம், நுட்பம், நேர்வது,

பகவன், பயன்படும், பழகுதல், பழங்குடி, பழமை, பாராட்டுதல், பாவம், பாவி, பிற்பகல், பிறந்தார்,

பிறவி, புல்லறிவு, புழுதி, பூசனை, பெருமிதம், மங்கலம், மதிநுட்பம், மாறுபாடு, மானம், முடிவு,

முற்பகல், மேற்கொள்வது, மேன்மை, வணக்கம், வாணிகம், வியந்து, விழிப்பது, வெல்வது, வெறுப்பு, வேண்டுதல்

மீண்டும் ஒருமுறை படித்து குறளில் இடம் பெறும் இன்றும் வழக்கில் உள்ள சொற்களை அறியவும்..

' திருக்குறள் வைப்புமுறை'

தேமொழி

58

திருக்குறளில் மக்களுக்குத் திருக்குறளின் பாலுள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்தும் வகையில் இந்நாள்வரையிலும் திருக்குறளுக்கு உரைகள் எழுதப்பட்டு வருகின்றன. திருக்குறள் நூலுக்கு எழுந்த பழைய உரைகள் பத்தும் எழுதியவர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் என்று பதின்மரைத் திருக்குறளின் உரையாசிரியர்களாக ஒரு வெண்பா கூறுகின்றது. திருக்குறள் உரையாசிரியர்களுள் பரிமேலழகர் காலத்தால் பிற்பட்டவர் என்றாலும் அவர் உரையினையே பெரும்பான்மையர் தழுவி குறள் நூல்கள் எழுதத் தொடங்கினர். அவ்வாறு அவர்கள் எழுதுகையில் பரிமேலழகர் கையாண்ட அதிகார வரிசைப்படுத்தும் முறையையும், அவற்றில் இருக்கும் குறள்களின் வரிசையையும் மற்றவர் பின்பற்றத் தொடங்கியதில் இன்று அது தர நிலைப்படுத்தும் முறையாகத் தானே அமைந்துவிட்டது.

வள்ளுவர் என்பது ஆசிரியரின் இயற்பெயர்தான் என்றும் உறுதிப்படுத்தப்படவில்லை, திருக்குறள் என்பதும் பாடலின் இலக்கண அடிப்படையில் சூட்டப்பட்டப் பெயர் என்ற நிலையில், அப்புலவர் எழுதிய 1330 குறளையும் அவர் 133 அதிகாரங்களாகப் பிரித்தார் என்பதை மட்டும் திருக்குறள் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இந்தியச் சமயங்கள் அறிவுறுத்தும் மனிதர் அறியவேண்டிய மெய்ப்பொருள் (புருஷார்த்தம்– தருமம்/அறம், அருத்தம்/பொருள், காமம்/இன்பம், மோட்சம்/வீடு) என்று நான்கு வகைப்படுத்தப்பட்டாலும் வள்ளுவரின் குறளை இதுவரை யாரும் வீடு என்ற பிரிவுக்குள் வகைப்படுத்த முயன்றதாகத் தெரியவில்லை. வீடு என்பது அறத்தின் பயன் என்பதால் அதை அறத்துப்பாலில் அடக்கிவிட்டார் வள்ளுவர் என்பது உரைகாரர்கள் கருத்தாக அமைகிறது. ஆதலால், முப்பாலுடன் வள்ளுவரின் பகுப்பு முறை முடிந்தது என்று தெரிகிறது. அது வள்ளுவரின் கொள்கை நிலைப்பாட்டை அறிவுறுத்தும் மிக முக்கியமான குறிப்பு என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

இருப்பினும், முப்பால் பிரிவுக்குள் இயல்கள், அதிகாரங்கள் ஆகியனவற்றை வகைப்படுத்துதலை இன்றுவரை பல தமிழ் அறிஞர்கள் முயன்றுள்ளனர். காமத்துப்பாலை முதலில் வைக்க வேண்டும் என்று கருதியவர்களில் மு.வரதராசனும், கண்ணதாசனும் குறிப்பிடத்தக்கவர்கள். அவரவர் பார்வையில், அவரவர் முன்வைக்கும் ஏரணப்படி வரிசைப்படுத்தப்படுவது திருக்குறளின் கட்டமைப்பாகவும் உள்ளது என்றாலும், பரிமேலழகர் முறை பொதுமுறையாக நிலைத்துவிட்டது; அதனால் மு.வரதராசனும் அதையே பின்பற்றி தெளிவுரை எழுதினார். எனினும், பழைய உரைகாரர்களில் காலத்தால் முதன்மையானவர் மணக்குடவர் என்பதால் அவர் முறையைத்தான் நாம் செம்பதிப்பு முறைக்காக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து வைக்கப்பட்டாலும், வழக்கத்திற்கு வந்துவிட்டதை இனி மாற்றுவது கடினம் மட்டுமல்ல தேவையற்றதும் ஆகும்.

பழைய பத்து உரைகாரர்களின் பெயர்கள் நமக்குக் கிடைத்தாலும் அவர்கள் சிலரின் உரைகள் நமக்குக் கிட்டியதில்லை. பரிமேலழகர் உரை போன்றே மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள், பருதியார் ஆகியோர் உரைகளும் தனித்தனியே வெளிவந்துள்ளன. இக்காலத்தில் இந்நூல்கள் பலவற்றை இணையச் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து தரவிறக்கம் செய்து படிக்கலாம் (https://archive.org/details/thirukkural_201808/). .

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

' திருக்குறள் வைப்புமுறை'

தேமொழி

58

அனைத்து உரைகளையும் ஒப்பாய்வு செய்ய உதவும் வகையில் ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் உரைவளப் பதிப்பும், மேலும் சில உரைக்கொத்து, ஒப்பாய்வு பதிப்புகளும் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. இயல்பிரித்தல், வகைப்படுத்தலில் உரையாசிரியர்களில் இறைநெறி, சமயநெறி, வாழ்வியல் நெறிகளின் தாக்கம் இருப்பதை மறுப்பதற்கு இல்லை. இவ்வாறான திருக்குறள் வரிசைப்படுத்தும் முறையை 'திருக்குறள் வைப்புமுறை' என்பர். வைப்புமுறை மாறுதல்களுக்கு, அதிகாரங்களை வரிசைப்படுத்தும் நோக்கத்தை உரைகாரர் விளக்கும் விதத்தில் புரிந்து கொள்ள முடியும்.

பழைய உரைகளில் காலத்தால் முந்திய பத்தாம் நூற்றாண்டு மணக்குடவர் உரையை, காலத்தால் பிந்திய பதின்மூன்றாம் நூற்றாண்டு பரிமேலழகர் உரையையும் அவற்றின் வைப்புமுறையையும் ஆய்வாளர்கள் ஒப்பிட்டுள்ளார்கள். இவற்றில் இயல்கள் ஒன்றாக இருப்பினும் அதிகாரங்கள் இயல்களுக்குள் மாறி உள்ளன. ஓர் எடுத்துக்காட்டுக்காக; முற்பட்ட மணக்குடவர், பின்வந்த பரிமேலழகர் ஆகியோரது அறத்துப்பால் பகுதியின் அதிகார வரிசையை மட்டுமே ஒப்பிடலாம். அறத்துப்பால் அதிகாரங்களில் 1.பாயிரம், 2.இல்லறவியல், 3. துறவறவியல், 4. ஊழியல் ஆகியவற்றில்; முதல் பாயிரம், இறுதி ஊழியல் ஆகியவற்றின் அதிகார வரிசை அமைப்பில் இருவர் வைப்புமுறையும் ஒன்றே, எந்த மாற்றமும் இல்லை. ஊழியியலில் இருப்பது ஒரே அதிகாரம் என்பதால் மாற்றவழியில்லை என்பது வேறு.

இடையில் உள்ள இல்லறவியலிலும், துறவறவியலிலும் இயல்களில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கையில் மாற்றமில்லை. இல்லறவியலில் 20 அதிகாரங்களும், துறவறவியலில் 13 அதிகாரங்களும் இருவர் வைப்புமுறையிலும் இருந்தாலும், இவற்றுக்குள் அதிகார வரிசைகளும் இடம் மாறியுள்ளன, இயல்களின் அதிகாரங்களும் வேறுபட்டுள்ளன:

1. இல்லறவியலின் பொறையுடைமை அதிகாரம் வரிசை மாறிவிட்டது. துறவறவியலில் தவமுடைமை, கூடாவொழுக்கம் அதிகாரங்கள் வரிசை மாறிவிட்டன.

2. மணக்குடவர் முறையில் இருக்கும் வாய்மையுடைமை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, புலான்மறுத்தல், கள்ளாமை ஆகிய ஆறு இல்லறவியல் அதிகாரங்களைப் பரிமேலழகர் துறவறவியலுக்கு மாற்றிவிட்டார்.

3. மணக்குடவர் முறையில் இருக்கும் இனியவைகூறல், அடக்கமுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை ஆகிய ஆறு துறவறவியல் அதிகாரங்களைப் பரிமேலழகர் இல்லறவியலுக்கு மாற்றிவிட்டார்.

கொடுக்கப்பட்டுள்ள படத்தில் இந்த மாற்றங்கள் காட்டப்பட்டுள்ளன. இயலுக்குள் மாற்றம் பச்சை நிறத்திலும், இயல் கடந்த மாற்றம் மஞ்சள் நிறத்திலும் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது ஒப்பிட்டுப் படிப்பவருக்கு ஏன் இந்த மாற்றம், காரணம் என்ன என்று பல கேள்விகள் எழும். மாற்றத்திற்குக் காரணம் அவர்கள் சார்ந்த சமயநெறிக்கும் பங்குண்டு. சமணர் என்று கருதப்படும் மணக்குடவர் கொல்லாமை, புலான்மறுத்தல் என்பவற்றை அனைவருக்கும் பொது என்று கருதுகிறார் என்பதும்; பரிமேலழகர் இவை இரண்டையும் துறவறவியலுக்கு மாற்றிவிட்டால் வைதீகக் கோட்பாடுகளுக்கு இசைவாக அமையும் என்றும் கருதி இருக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு மாற்றத்திற்கும் பின்னணியை அறியமுயல்வது ஆய்வாளர்களுக்கு மேலும் பல தகவல்களைக் கொடுக்கக் கூடும்.

படம் அடுத்த பக்கத்தில் . . .

' திருக்குறள் வைப்புமுறை'

தேமொழி

58

மணக்குடவர்	அதிகாரம்	பரிமேலழகர்
	பாயிரம்	
கடவுள் வாழ்த்து	1	கடவுள் வாழ்த்து
வான் சிறப்பு	2	வான்சிறப்பு
நீத்தார் பெருமை	3	நீத்தார் பெருமை
அறன் வலியறுத்தல்	4	அறன்வலியுறுத்தல்
	இல்லறவியல்	
இல்வாழ்க்கை	5	இல்வாழ்க்கை
வாழ்க்கைத்துணைநலம்	6	வாழ்க்கைத் துணைநலம்
மக்கட்பேறு	7	மக்கட்பேறு
அன்புடைமை	8	அன்புடைமை
விருந்தோம்பல்	9	விருந்தோம்பல்
வாய்மையுடைமை	10	இனியவை கூறல்
செய்ந்நன்றியறிதல்	11	செய்ந்நன்றி அறிதல்
நடுவுநிலைமை	12	நடுவு நிலைமை
பொறையுடைமை	13	அடக்கமுடைமை
ஒழுக்கமுடைமை	14	ஒழுக்கமுடைமை
பிறனில் விழையாமை	15	பிறனில் விழையாமை
வெகுளாமை	16	பொறையுடைமை
இன்னாசெய்யாமை	17	அழுக்காறாமை
கொல்லாமை	18	வெஃகாமை
புலான் மறுத்தல்	19	புறங்கூறாமை
கள்ளாமை	20	பயனில சொல்லாமை
தீவினையச்சம்	21	தீவினையச்சம்
ஒப்புரவறிதல்	22	ஒப்புரவறிதல்
ஈகையுடைமை	23	ஈகை
புகழுடைமை	24	புகழ்
	துறவறவியல்	
அருளுடைமை	25	அருளுடைமை
இனியவைகூறல்	26	புலால் மறுத்தல்
அடக்கமுடைமை	27	தவம்
தவமுடைமை	28	கூடாவொழுக்கம்
கூடாவொழுக்கம்	29	கள்ளாமை
அழுக்காறாமை	30	வாய்மை
வெஃகாமை	31	வெகுளாமை
புறங்கூறாமை	32	இன்னா செய்யாமை
பயனில சொல்லாமை	33	கொல்லாமை
நிலையாமை	34	நிலையாமை
துறவுடைமை	35	துறவு
மெய்யுணர்தல்	36	மெய்யுணர்தல்
அவாவறுத்தல்	37	அவா அறுத்தல்
	ஊழியல்	
ஊழ்	38	ஊழ்

' திருக்குறள் வைப்புமுறை' . . . . . .

தேமொழி

59

திருக்குறள் பழைய உரையாசிரியர்கள் முப்பால் பிரிவுகளுக்குள் பல்வேறுவகையில் இயல்கள் பிரிப்பதிலும், அவற்றின் கீழ் அதிகாரங்களை வரிசைப்படுத்துவதிலும் மட்டும் வேறுபடவில்லை, அந்த அதிகாரங்களின் குறள்களுக்கு உரை எழுதிய வைப்புமுறையிலும் (வரிசைப்படுத்திக் கொள்வதிலும்) மாறுபடுகின்றனர். இக்காலத்தில் நாம் கையாளும் பரிமேலழகர் வைப்பு முறையைப் பின்பற்றி அதனுடன் மற்ற உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறையை ஒப்பிட்டுள்ளார்கள் பல ஆய்வாளர்கள்.

வைப்புமுறை வேறுபாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாக; நாணுடைமை அதிகாரத்தின் குறட்பாக்களின் வைப்புமுறையை கிடைக்கும் பழைய உரைகாரர்களான பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் ஆகிய ஐவரின் உரைகளும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். இந்த அதிகாரத்தின் குறள்களில் ஒரு குறள்கூட அனைவராலும் அதே வரிசையில் அமைக்கப்படவில்லை என்பதைக் காணமுடிகிறது. மு.சண்முகம் பிள்ளை(1972) எழுதிய 'திருக்குறள் அமைப்பும் முறையும்' என்னும் திருக்குறள் ஆய்வு நூலை சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

பரிமேலழகர் – பரிப்பெருமாள் குறள் வைப்புமுறை ஒப்பீடு:

உரையாசிரியர் பரிப்பெருமாள் காலம் 11 ஆம் நூற்றாண்டு, இவருக்கும் முன்னவரான மணக்குடவர் உரையைத் தழுவி இவருடைய உரை எழுதப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கா.ம.வேங்கடராமையா(1988) எழுதிய 'திருக்குறள் மூலமும் பரிப்பெருமாள் உரையும்' என்ற நூலை வெளியிட்டுள்ளது. மணக்குடவரின் திருக்குறள் வைப்புமுறையை அப்படியே பின்பற்றியதோடு மட்டுமின்றி, அவரது உரையையும் அப்படியே எடுத்து எழுதிவிட்டு மேலும் விளக்கம் எழுதும் முறை இவருடையது. எடுத்துக்காட்டாக;

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

[மணக்குடவர் உரை விளக்கம்] இதன் பொருள்: பிறர் செய்த நன்றியை மறப்பது என்றும் நன்றல்ல, பிறர் செய்த தீமையை அன்றே மறப்பதன்றே நன்றாம் (என்றவாறு).

[பரிப்பெருமாள் உரை விளக்கம்] இது, தீமை மறக்கவேண்டு மென்று கூறிற்று.

இவர்கள் இருவரும் இக்குறளை 102ஆம் குறளாக வைக்கிறார்கள்; பரிமேலழகர் நூலில் இக்குறள் 108 ஆவது குறளாக அமைகிறது.

குறைந்த அளவு வேறுபாடாக, பதினாறு இடங்களில் பரிப்பெருமாள் மணக்குடவரிடம் இருந்து வேறுபடுகிறார் என்பது ஆய்வாளர்கள் கருத்தாக இருக்கிறது.

ஓர் ஒப்பீட்டு ஆய்வாக, 1330 குறள்களின் வைப்புமுறையில் பரிப்பெருமாளுக்கும் பரிமேலழகருக்கும் அதிகாரங்களின் கீழ் குறள்களின் வரிசைப் படுத்துதலில் எந்த அளவு வேறுபாடு என்று ஆய்வு செய்த பொழுது: வெறும் 22% மட்டுமே இருவர் வரிசையும் ஒத்துப் போனது.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .

' திருக்குறள் வைப்புமுறை' . . . . . .

தேமொழி

59

முன்பக்கத் தொடர்ச்சி . . . . .

பரிமேலழகர் வைப்புமுறைக்கும் பரிப்பெருமாள் வைப்புமுறைக்கும் இடையில் உள்ள வேற்றுமை 78%. ஒரு தோராயமாக ஐந்து குறள்களில் ஒன்றுமட்டுமே அதே வரிசை எண்ணில் இருக்க வாய்ப்பு உள்ளது. அந்த அளவு வேறுபாடு காணப்படுகிறது.

மக்கட்பேறு, விருந்தோம்பல் ஆகிய '2' அதிகாரங்களில் மட்டுமே இருவரின் குறள் வரிசைப்படுத்துதல் ஒன்றாக இருக்கிறது;

அன்புடைமை, பொறையுடைமை, ஒப்புரவறிதல், தவம், வாய்மை , அறிவுடைமை, குற்றங்கூறாமை, தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், பொச்சாவாமை, கொடுங்கோன்மை, வினைத்திட்பம், மன்னரைச் சேர்ந்தொழுகல், அவை அஞ்சாமை, தீநட்பு, புல்லறிவாண்மை, உட்பகை, மருந்து, பெருமை, நன்றியில் செல்வம், நாணுடைமை, இரவச்சம், அலர் அறிவுறுத்தல், பசப்புறு பருவரல், தனிப்படர் மிகுதி, கனவுநிலை உரைத்தல், அவர்வயின் விதும்பல், புணர்ச்சி விதும்பல், புலவி நுணுக்கம், ஊடலுவகை ஆகிய '30'அதிகாரங்களில் எல்லாக் குறள்களுமே வரிசை மாறியுள்ளன;

இவை தவிர்த்த '101' அதிகாரங்களில் ஆங்காங்கே ஒரு சில குறள்கள் தற்செயலாக அதே வரிசையில் அமைந்துவிடுவதாகத் தெரிகிறது.

இதற்கான மாதிரி ஒப்பீடு அட்டவணையின் படம் இணைக்கப்பட்டுள்ளது. படத்தில் பச்சை நிறம் இருவர் வரிசையிலும் இசைந்து செல்லும் குறள்கள். மக்கட்பேறு, விருந்தோம்பல் ஆகிய அதிகாரங்கள் ஒத்திருப்பதையும்; அன்புடைமை அதிகாரத்தில் எல்லாமே மாறி இருப்பதையும்; மற்றவற்றில் ஒரு சில குறள்கள் மட்டுமே ஒத்திருப்பதையும் காணலாம். முழுமையான 1330 குறள்களுக்குமான ஒப்பீட்டு அட்டவணை https://aintinai.blogspot.com/2025/12/kural-couplets-ordering.html இணையப்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (291) வாய்மை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். (311)
இன்னா செய்யாமை

என்று அதிகாரத் தலைப்பை வரையறுப்பது போன்ற குறள்களை பரிமேலழகர் அவற்றுக்கான அதிகாரங்களின் முதல் குறளாக மாற்றியது சிறப்பாக உள்ளது. எனினும், பிற இடங்களில் இதே முறையை அவர் பின்பற்றியதாகவும் தெரியவில்லை. ஆதலால், இதுவும் தற்செயலாக அமைந்துவிட்ட ஓர் அமைப்போ என்று எண்ண வைக்கிறது. மாற்றத்துக்கான அடிப்படை ஏரணம் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

இந்த ஒப்பீடு; பாடல் தொகுப்பாக இருக்கும் தொன்ம இலக்கியங்களின் பாடல் வரிசை அவ்வாறே காலம் காலமாகப் பின்பற்றப்படுகிறது என்ற எண்ணம் தவறானது என்று காட்டுகிறது. தொகுப்புப் பாடல்களாக இருக்கும் இலக்கியங்களில் பாடல் வரிசைகளில் காலம்தோறும் மாற்றம் அடைந்திருக்கக் கூடிய வாய்ப்புண்டு என்ற புரிதலையும் தருகிறது.

*படங்கள் அடுத்த பக்கத்தில் . . .

' திருக்குறள் வைப்புமுறை' . . . . .

தேமொழி

59

நாணுடைமை

குறள்	பரிமே-லழகர்	மணக்-குடவர்	பரிப்-பெருமாள்	பரிதி-யார்	காலிங்-கர்
கருமத்தால் நாணுதல்	1	9	9	5	4
ஊனுடை எச்சம்	2	1	1	1	1
ஊனைக் குறித்த	3	2	2	2	2
அணியன்றோ நாணுடைமை	4	4	5	3	6
பிறர்பழியும் தம்பழியும்	5	10	10	6	7
நாண்வேலி கொள்ளாது	6	8	4	10	10
நாணால் உயிரை	7	3	3	8	8
பிறர் நாணத்தக்கது	8	5	6	9	3
குலஞ்சுடும் கொள்கை	9	6	7	7	9
நாணகத்தில்லார்	10	7	8	4	5

https://thirukkural.io/102/naanudaimai/

பரிமேலழகர் - பரிப்பெருமாள் குறள் வைப்பு முறை ஒப்பீடு

பஅ — பரிமேலழகர் பபெ — பரிப்பெருமாள்

6		7		8		9		10	
வாழ்க்கைத் துணைநலம்		மக்கட்பேறு		அன்புடைமை		விருந்தோம்பல்		இனியவை கூறல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
51	51	61	61	71	80	81	81	91	98
52	52	62	62	72	75	82	82	92	91
53	56	63	63	73	76	83	83	93	92
54	54	64	64	74	78	84	84	94	96
55	58	65	65	75	77	85	85	95	94
56	57	66	66	76	79	86	86	96	93
57	53	67	67	77	71	87	87	97	97
58	59	68	68	78	72	88	88	98	95
59	55	69	69	79	73	89	89	99	99
60	60	70	70	80	74	90	90	100	100



பரிமேலழகர் - பரிப்பெருமாள் குறள் வைப்பு முறை ஒப்பீடு

பஅ	பரிமேலழகர்	பபெ	பரிப்பெருமாள்

1		2		3		4		5		6		7		8		9		10	
கடவுள் வாழ்த்து		வான் சிறப்பு		நீத்தார் பெருமை		அறன் வலியுறுத்தல்		இல்வாழ்க்கை		வாழ்க்கைத் துணைநலம்		மக்கட்பேறு		அன்புடைமை		விருந்தோம்பல்		இனியவை கூறல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
1	1	11	20	21	21	31	31	41	41	51	51	61	61	71	80	81	81	91	98
2	2	12	19	22	22	32	38	42	42	52	52	62	62	72	75	82	82	92	91
3	3	13	14	23	26	33	32	43	43	53	56	63	63	73	76	83	83	93	92
4	6	14	16	24	23	34	40	44	44	54	54	64	64	74	78	84	84	94	96
5	7	15	18	25	25	35	39	45	45	55	58	65	65	75	77	85	85	95	94
6	8	16	15	26	29	36	33	46	46	56	57	66	66	76	79	86	86	96	93
7	4	17	17	27	24	37	34	47	48	57	53	67	67	77	71	87	87	97	97
8	5	18	11	28	27	38	36	48	47	58	59	68	68	78	72	88	88	98	95
9	10	19	12	29	28	39	35	49	50	59	55	69	69	79	73	89	89	99	99
10	9	20	13	30	30	40	37	50	49	60	60	70	70	80	74	90	90	100	100

11		12		13		14		15		16		17		18		19		20	
செய்ந்நன்றி அறிதல்		நடுவுநிலைமை		அடக்கமுடைமை		ஒழுக்கமுடைமை		பிறனில் விழையாமை		பொறையுடைமை		அழுக்காறாமை		வெஃகாமை		புறங்கூறாமை		பயனில சொல்லாமை	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
101	103	111	113	121	130	131	140	141	142	151	154	161	161	171	177	181	183	191	196
102	105	112	120	122	121	132	131	142	143	152	151	162	162	172	175	182	185	192	192
103	104	113	117	123	122	133	135	143	145	153	156	163	166	173	174	183	182	193	193
104	106	114	119	124	124	134	133	144	144	154	153	164	163	174	173	184	181	194	194
105	108	115	115	125	128	135	136	145	146	155	157	165	170	175	172	185	184	195	195
106	101	116	118	126	123	136	134	146	147	156	158	166	167	176	176	186	189	196	197
107	107	117	116	127	125	137	137	147	141	157	152	167	168	177	171	187	186	197	200
108	102	118	111	128	127	138	138	148	148	158	155	168	169	178	179	188	187	198	198
109	109	119	112	129	126	139	139	149	149	159	160	169	164	179	180	189	188	199	199
110	110	120	114	130	129	140	132	150	150	160	159	170	165	180	178	190	190	200	191

21		22		23		24		25		26		27		28		29		30	
தீவினையச்சம்		ஒப்புரவறிதல்		ஈகை		புகழ்		அருளுடைமை		புலால் மறுத்தல்		தவம்		கூடாவொழுக்கம்		கள்ளாமை		வாய்மை	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
201	208	211	212	221	222	231	232	241	242	251	253	261	264	271	276	281	281	291	293
202	207	212	211	222	221	232	233	242	241	252	252	262	263	272	275	282	282	292	294
203	210	213	219	223	223	233	234	243	243	253	254	263	262	273	273	283	285	293	291
204	204	214	220	224	225	234	235	244	244	254	256	264	268	274	274	284	284	294	295
205	205	215	216	225	230	235	240	245	245	255	300	265	270	275	278	285	287	295	296
206	206	216	217	226	229	236	231	246	248	256	255	266	261	276	277	286	288	296	297
207	202	217	218	227	228	237	236	247	246	257	251	267	266	277	272	287	290	297	298
208	203	218	213	228	226	238	237	248	249	258	257	268	265	278	271	288	289	298	299
209	201	219	214	229	227	239	239	249	247	259	258	269	267	279	280	289	286	299	300
210	209	220	215	230	224	240	238	250	250	260	259	270	269	280	279	290	283	300	292

31		32		33		34		35		36		37		38		39		40	
வெகுளாமை		இன்னா செய்யாமை		கொல்லாமை		நிலையாமை		துறவு		மெய்யுணர்தல்		அவா அறுத்தல்		ஊழ்		இறைமாட்சி		கல்வி	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
301	302	311	314	321	324	331	331	341	345	351	352	361	363	371	371	381	381	391	391
302	304	312	312	322	326	332	333	342	347	352	357	362	369	372	372	382	382	392	392
303	301	313	313	323	323	333	332	343	341	353	356	363	367	373	373	383	383	393	393
304	308	314	320	324	322	334	334	344	342	354	351	364	365	374	378	384	384	394	398
305	305	315	316	325	325	335	335	345	343	355	353	365	364	375	375	385	386	395	400
306	306	316	311	326	327	336	336	346	349	356	358	366	361	376	376	386	385	396	394
307	307	317	315	327	321	337	337	347	344	357	355	367	366	377	377	387	388	397	397
308	303	318	317	328	330	338	338	348	348	358	354	368	362	378	379	388	389	398	395
309	309	319	318	329	329	339	339	349	346	359	359	369	368	379	380	389	390	399	399
310	310	320	319	330	328	340	340	350	350	360	360	370	370	380	374	390	387	400	396

41		42		43		44		45		46		47		48		49		50	
கல்லாமை		கேள்வி		அறிவுடைமை		குற்றங்கூறாமை		பெரியாரைத் துணைக்கோடல்		சிற்றினம் சேராமை		தெரிந்து செயல் வகை		வலியறிதல்		காலம் அறிதல்		இடன் அறிதல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
401	401	411	417	421	429	431	432	441	443	451	451	461	464	471	471	481	481	491	491
402	402	412	412	422	426	432	433	442	442	452	454	462	461	472	473	482	488	492	498
403	403	413	418	423	424	433	440	443	441	453	453	463	465	473	472	483	489	493	497
404	404	414	411	424	425	434	431	444	450	454	455	464	462	474	474	484	490	494	500
405	405	415	414	425	423	435	438	445	444	455	456	465	470	475	476	485	482	495	495
406	408	416	413	426	422	436	439	446	445	456	457	466	468	476	475	486	483	496	499
407	407	417	416	427	428	437	434	447	446	457	460	467	463	477	477	487	484	497	496
408	409	418	420	428	427	438	435	448	449	458	459	468	469	478	479	488	485	498	492
409	406	419	415	429	430	439	436	449	447	459	458	469	467	479	478	489	487	499	494
410	410	420	419	430	421	440	437	450	448	460	452	470	466	480	480	490	486	500	493

51		52		53		54		55		56		57		58		59		60	
தெரிந்து தெளிதல்		தெரிந்து வினையாடல்		சுற்றந் தழால்		பொச்சாவாமை		செங்கோன்மை		கொடுங்கோன்மை		வெருவந்த செய்யாமை		கண்ணோட்டம்		ஒற்றாடல்		ஊக்கம் உடைமை	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
501	509	511	513	521	524	531	538	541	541	551	557	561	561	571	571	581	581	591	591
502	507	512	515	522	526	532	537	542	544	552	560	562	562	572	575	582	585	592	592
503	501	513	514	523	525	533	531	543	547	553	552	563	565	573	577	583	590	593	598
504	508	514	520	524	521	534	533	544	545	554	556	564	564	574	578	584	586	594	594
505	506	515	511	525	522	535	540	545	546	555	559	565	569	575	579	585	582	595	593
506	502	516	512	526	523	536	539	546	548	556	551	566	567	576	580	586	583	596	595
507	503	517	517	527	528	537	536	547	549	557	558	567	568	577	576	587	584	597	597
508	504	518	516	528	527	538	534	548	550	558	553	568	566	578	574	588	587	598	599
509	510	519	518	529	529	539	532	549	542	559	555	569	570	579	572	589	588	599	600
510	505	520	519	530	530	540	535	550	543	560	554	570	563	580	573	590	589	600	596

61		62		63		64		65		66		67		68		69		70	
மடியின்மை		ஆள்வினையுடைமை		இடுக்கண் அழியாமை		அமைச்சு		சொல்வன்மை		வினைத்தூய்மை		வினைத்திட்பம்		வினைசெயல் வகை		தூது		மன்னரைச் சேர்ந்தொழுதல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
601	603	611	612	621	621	631	635	641	650	651	651	661	653	671	680	681	681	691	697
602	601	612	613	622	626	632	631	642	645	652	652	662	664	672	672	682	685	692	695
603	602	613	620	623	623	633	636	643	643	653	653	663	667	673	674	683	683	693	696
604	604	614	615	624	624	634	634	644	649	654	656	664	665	674	673	684	684	694	693
605	608	615	611	625	625	635	633	645	641	655	654	665	670	675	671	685	688	695	694
606	607	616	616	626	628	636	632	646	644	656	655	666	661	676	677	686	689	696	691
607	605	617	614	627	627	637	637	647	648	657	660	667	669	677	678	687	690	697	692
608	606	618	617	628	622	638	638	648	642	658	657	668	666	678	679	688	682	698	700
609	609	619	618	629	629	639	640	649	646	659	658	669	668	679	676	689	686	699	698
610	610	620	619	630	630	640	639	650	647	660	659	670	662	680	675	690	687	700	699

71		72		73		74		75		76		77		78		79		80	
குறிப்பறிதல்		அவையறிதல்		அவை அஞ்சாமை		நாடு		அரண்		பொருள்செயல்வகை		படைமாட்சி		படைச்செருக்கு		நட்பு		நட்பாராய்தல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
701	707	711	711	721	730	731	734	741	741	751	758	761	761	771	774	781	781	791	791
702	708	712	715	722	723	732	737	742	742	752	760	762	766	772	773	782	790	792	800
703	710	713	719	723	721	733	739	743	743	753	759	763	769	773	772	783	788	793	792
704	706	714	720	724	722	734	735	744	745	754	753	764	762	774	775	784	783	794	793
705	705	715	713	725	729	735	736	745	746	755	752	765	765	775	776	785	789	795	794
706	702	716	712	726	725	736	738	746	747	756	754	766	763	776	777	786	782	796	799
707	701	717	714	727	726	737	731	747	748	757	757	767	764	777	778	787	785	797	796
708	709	718	716	728	724	738	732	748	749	758	755	768	768	778	771	788	784	798	797
709	704	719	717	729	727	739	733	749	744	759	751	769	767	779	779	789	786	799	798
710	703	720	718	730	728	740	740	750	750	760	756	770	770	780	780	790	787	800	795

81		82		83		84		85		86		87		88		89		90	
பழைமை		தீ நட்பு		கூடா நட்பு		பேதைமை		புல்லறிவாண்மை		இகல்		பகைமாட்சி		பகைத்திறந் தெரிதல்		உட்பகை		பெரியாரைப் பிழையாமை	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
801	801	811	814	821	828	831	831	841	848	851	851	861	861	871	871	881	884	891	900
802	802	812	818	822	821	832	832	842	847	852	860	862	867	872	873	882	881	892	892
803	810	813	819	823	825	833	834	843	850	853	858	863	868	873	875	883	882	893	891
804	803	814	811	824	822	834	833	844	841	854	859	864	869	874	877	884	888	894	893
805	806	815	812	825	823	835	835	845	842	855	854	865	870	875	874	885	889	895	895
806	807	816	813	826	824	836	837	846	845	856	855	866	864	876	876	886	890	896	896
807	805	817	820	827	826	837	838	847	849	857	856	867	865	877	878	887	886	897	894
808	804	818	815	828	827	838	836	848	846	858	853	868	866	878	880	888	885	898	899
809	808	819	817	829	829	839	839	849	844	859	852	869	863	879	879	889	883	899	898
810	809	820	816	830	830	840	840	850	843	860	857	870	862	880	872	890	887	900	897

91		92		93		94		95		96		97		98		99		100	
பெண்வழிச்சேறல்		வரைவின் மகளிர்		கள்ளுண்ணாமை		சூது		மருந்து		குடிமை		மானம்		பெருமை		சான்றாண்மை		பண்புடைமை	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
901	908	911	912	921	924	931	931	941	946	951	952	961	961	971	976	981	988	991	992
902	909	912	911	922	921	932	937	942	941	952	953	962	963	972	971	982	984	992	991
903	904	913	913	923	922	933	934	943	942	953	951	963	962	973	972	983	983	993	999
904	903	914	914	924	923	934	939	944	943	954	955	964	964	974	977	984	982	994	994
905	902	915	915	925	930	935	940	945	944	955	957	965	965	975	978	985	985	995	993
906	901	916	916	926	925	936	932	946	945	956	956	966	966	976	979	986	986	996	995
907	905	917	918	927	929	937	935	947	950	957	959	967	967	977	973	987	987	997	1000
908	906	918	917	928	928	938	936	948	947	958	960	968	968	978	980	988	981	998	998
909	907	919	919	929	927	939	933	949	948	959	954	969	969	979	974	989	989	999	996
910	910	920	920	930	926	940	938	950	949	960	958	970	970	980	975	990	990	1000	997

101		102		103		104		105		106		107		108		109		110	
நன்றியில் செல்வம்		நாணுடைமை		குடிசெயல்வகை		உழவு		நல்குரவு		இரவு		இரவச்சம்		கயமை		தகையணங்குறுத்தல்		குறிப்பறிதல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
1001	1003	1011	1019	1021	1024	1031	1031	1041	1041	1051	1051	1061	1062	1071	1071	1081	1081	1091	1091
1002	1006	1012	1011	1022	1023	1032	1039	1042	1042	1052	1054	1062	1068	1072	1073	1082	1082	1092	1094
1003	1002	1013	1012	1023	1028	1033	1037	1043	1043	1053	1058	1063	1064	1073	1072	1083	1083	1093	1092
1004	1005	1014	1015	1024	1027	1034	1038	1044	1048	1054	1056	1064	1070	1074	1075	1084	1084	1094	1093
1005	1007	1015	1020	1025	1029	1035	1035	1045	1049	1055	1059	1065	1069	1075	1074	1085	1087	1095	1096
1006	1008	1016	1014	1026	1021	1036	1036	1046	1044	1056	1057	1066	1063	1076	1078	1086	1085	1096	1098
1007	1004	1017	1013	1027	1022	1037	1032	1047	1045	1057	1055	1067	1061	1077	1077	1087	1089	1097	1099
1008	1010	1018	1016	1028	1026	1038	1033	1048	1047	1058	1052	1068	1065	1078	1079	1088	1086	1098	1097
1009	1001	1019	1017	1029	1025	1039	1034	1049	1046	1059	1053	1069	1066	1079	1076	1089	1088	1099	1095
1010	1009	1020	1018	1030	1030	1040	1040	1050	1050	1060	1060	1070	1067	1080	1080	1090	1090	1100	1100

111		112		113		114		115		116		117		118		119		120	
புணர்ச்சி மகிழ்தல்		நலம் புனைந்துரைத்தல்		காதல் சிறப்புரைத்தல்		நாணுத் துறவுரைத்தல்		அலர் அறிவுறுத்தல்		பிரிவாற்றாமை		படர்மெலிந்திரங்கல்		கண்விதுப்பழிதல்		பசப்புறு பருவரல்		தனிப்படர் மிகுதி	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
1101	1102	1111	1117	1121	1124	1131	1131	1141	1150	1151	1156	1161	1162	1171	1172	1181	1188	1191	1192
1102	1101	1112	1115	1122	1121	1132	1132	1142	1145	1152	1151	1162	1163	1172	1173	1182	1186	1192	1196
1103	1104	1113	1119	1123	1122	1133	1133	1143	1147	1153	1159	1163	1170	1173	1174	1183	1189	1193	1197
1104	1107	1114	1116	1124	1123	1134	1134	1144	1148	1154	1154	1164	1164	1174	1178	1184	1185	1194	1198
1105	1105	1115	1118	1125	1125	1135	1138	1145	1146	1155	1155	1165	1161	1175	1180	1185	1184	1195	1194
1106	1108	1116	1111	1126	1127	1136	1136	1146	1141	1156	1158	1166	1165	1176	1176	1186	1182	1196	1195
1107	1103	1117	1112	1127	1130	1137	1139	1147	1142	1157	1152	1167	1166	1177	1177	1187	1183	1197	1191
1108	1109	1118	1113	1128	1128	1138	1140	1148	1149	1158	1153	1168	1167	1178	1171	1188	1187	1198	1199
1109	1110	1119	1114	1129	1129	1139	1135	1149	1143	1159	1160	1169	1168	1179	1179	1189	1190	1199	1200
1110	1106	1120	1120	1130	1126	1140	1137	1150	1144	1160	1157	1170	1169	1180	1175	1190	1181	1200	1193

121		122		123		124		125		126		127		128		129		130	
நினைந்தவர் புலம்பல்		கனவுநிலை உரைத்தல்		பொழுதுகண்டு இரங்கல்		உறுப்புநலன் அழிதல்		நெஞ்சோடு கிளத்தல்		நிறையழிதல்		அவர்வயின் விதும்பல்		குறிப்பறிவுறுத்தல்		புணர்ச்சி விதும்பல்		நெஞ்சோடு புலத்தல்	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
1201	1201	1211	1220	1221	1221	1231	1231	1241	1250	1251	1254	1261	1265	1271	1271	1281	1282	1291	1291
1202	1207	1212	1211	1222	1226	1232	1232	1242	1243	1252	1251	1262	1269	1272	1275	1282	1283	1292	1300
1203	1203	1213	1212	1223	1230	1233	1233	1243	1244	1253	1252	1263	1270	1273	1274	1283	1290	1293	1298
1204	1202	1214	1213	1224	1228	1234	1234	1244	1248	1254	1253	1264	1267	1274	1272	1284	1287	1294	1295
1205	1204	1215	1214	1225	1224	1235	1235	1245	1246	1255	1255	1265	1263	1275	1273	1285	1288	1295	1297
1206	1208	1216	1219	1226	1222	1236	1236	1246	1245	1256	1256	1266	1261	1276	1276	1286	1289	1296	1296
1207	1206	1217	1216	1227	1227	1237	1237	1247	1241	1257	1260	1267	1264	1277	1277	1287	1284	1297	1294
1208	1209	1218	1215	1228	1223	1238	1239	1248	1247	1258	1257	1268	1262	1278	1280	1288	1286	1298	1293
1209	1205	1219	1217	1229	1229	1239	1238	1249	1249	1259	1259	1269	1266	1279	1279	1289	1281	1299	1299
1210	1210	1220	1218	1230	1225	1240	1240	1250	1242	1260	1258	1270	1268	1280	1278	1290	1285	1300	1292

131		132		133	
புலவி		புலவி நுணுக்கம்		ஊடலுவகை	
பஅ	பபெ	பஅ	பபெ	பஅ	பபெ
1301	1301	1311	1319	1321	1329
1302	1303	1312	1320	1322	1325
1303	1309	1313	1317	1323	1330
1304	1307	1314	1311	1324	1328
1305	1302	1315	1312	1325	1327
1306	1306	1316	1313	1326	1323
1307	1304	1317	1314	1327	1322
1308	1308	1318	1315	1328	1326
1309	1305	1319	1318	1329	1321
1310	1310	1320	1316	1330	1324

திருவள்ளுவராண்டு 2055 01.01.2025

உலகத்தமிழ்

இதழ் உ௬௱௫ (265)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்



புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை எனத் தொடங்கும் கபிலரின்
ஐங்குறுநூற்றுப்பாடல் எண் இருநூற்(று) அறுபத்(து) ஐந்து
ஒலிகொள் தமிழ்ச் சொற்களைப் புவிமிசை போற்றும் வண்ணம்திரட்டி வெளியிடும்
உலகத்தமிழிதழ் இரு நூற்(று)அறுபத்(து) ஐந்து